விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 கார்த்திகை 29 சனிக்கிழமை (15.12.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 361

## பிரதமர் பதவியிலிருந்து மகிந்த ராஜபக்ஷ இன்று விலகுகிறார்



### புதல்வர் நாமல் அறிவிப்பு

(கொழும்பு) நாட்டு மக்களுக்காக இன்று விசேட உரையை ஆற்றிய பின்னர் மகிந்த ராஜபக்ஷ தான் புதிதாக ஏற்றுக் கொண்ட பிரதமர் பதவியை இராஜினாமா செய்யவுள்ளார் என அவரது புதல்வரான நாமல் ராஜபக்ஷ நேற்று தெரிவித்துள்ளார்.(23-ம் பக்.)

### மகிந்தவின் மனு தோல்வி

## அமைச்சரவைக்கு எதிரான இடைக்காலத்தடை நீடிப்பு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் பிரதமர் பதவி மற்றும் அவரது அமைச்சரவை செயற்படுவதற்கு விதிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவை நீக்குவதற்கு உயர் நீதிமன்றம் ஏகமனதாக மறுப்புத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பிரதமர் பதவியிலும் அமைச்சர் பதவியிலும் கடமைகளை முன்னெடுக்க 23

## ஜனாதிபதியின் செயற்பாடு ஏற்றுக்கொள்ள முடியாது!

### ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி ஆசனத்தில் அமர்ந்து கொண்டு மைத்திரிபால சிறிசேன சிறுபிள்ளை போல் செயற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அலரிமாளிகையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் 02

## அடுத்த பாராளுமன்ற அமர்வில் பங்கேற்க மகிந்த அணி முடிவு

(கொழும்பு)

இம்மாதம் 18-ம் திகதி இடம்பெறவுள்ள பாராளுமன்ற அமர்வில் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ள 23

## பிரதமராக ரணில் நாளை பதவியேற்பு



### உடும்புப்பிடியிலிருந்து ஜனாதிபதி தளர்ந்ததாக ராஜித தெரிவிப்பு

(கொழும்பு) ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பிரதமராக பதவியேற்கின்றார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நேற்று இரவு தொலைபேசியில் இடம்பெற்ற உரையாடலின் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். (23-ம் பக்.)

## த.தே.கூட்டமைப்பு இராஜதந்திர அரசியலாம்

### - சிறீதரன் எம்.பி

(கிளிநொச்சி)

அரசியல் ரீதியில் இராஜதந்திர அரசியலையே நாம் பின்பற்றுகின்றோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற 23

### இரும்புக் கம்பியால் தலையில் பலமாக குத்தப்பட்டு

## ஆபத்தான நிலையில் இளைஞர் யாழ். போதனாவில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவுப் பகுதியில் புத்தளம் பகுதியைச் சேர்ந்தோருக்கு இடையே இடம்பெற்ற கைகலப்பில் இளைஞர் ஒருவர் தலையில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இளைஞரின் காதுக்கு மேற்பகுதியில் இரும்புக் கம்பி ஒன்றால் குத்தப்பட்டு, கம்பி மற்றக்காது 23

## எதிர்க்கட்சியில் அமர்ந்து போராடுவதற்கு தயார்!

### மகிந்த அணியினர் தெரிவிப்பு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ பதவியை இராஜினாமா செய்ய தீர்மானித்துள்ளார். எனவே நாம் எதிர்க்கட்சியில் அமர்ந்து கொண்டு போராட எதிர்பார்க்கின்றோம் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் லஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி செயலகத்திற்கு விஜயம் செய்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நேற்று வெள்ளிக்கிழமை கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார். இதனை அடுத்து 23

## ஒழுக்கச் சீர்கேடு சமூகத்தில் பாரிய பாதிப்பு

### கரு ஜயசூரிய தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் ஒழுக்கம் சீர்கெட்டு வரும் சந்தர்ப்பத்தில் அதற்கு எதிராக குரலெழுப்ப நடவடிக்கை மேற்கொள்வதாக சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கோட்டே விகாரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 23

### பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு

## சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் ஜனாதிபதி கோரியிருந்தார்

(கொழும்பு)

பிரதமராகுமாறு சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் தாம் கோரியதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முக்கியஸ்தர்களை நேற்று வெள்ளிக்கிழமை மாலை சந்தித்து பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், கரு ஜயசூரிய மற்றும் ரணிலை நான் நேற்று முன்தினம் இரவு சந்தித்தேன். பிரதமர் பதவியை ஏற்கும்படி நான் கருவிடம் கேட்டேன்.

ஆனால் அவர் அதற்கு பதில் அளிக்கவில்லை. கட்சியுடன் பேசிவிட்டு பதில் தருவதாக சொன்னார்கள். ஆனால் இன்னமும் பதில் இல்லை., மறுபுறம் நீதிமன்ற வழக்குகள் தொடர்வதால் 23

## உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு ஐ.தே.கவின் வெற்றி அல்ல

### ஜே.வி.பி தெரிவிப்பு

(கொழும்பு)

உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றி அல்ல என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

பத்தரமுல்லையில் உள்ள கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கட்சியின் பிரசார செயலாளரான பாராளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பு ஜனநாயகம் தொடர்பான வரலாற்று முக்கியத்துவமிக்க தீர்ப்பாகும். இதனை ஐக்கிய தேசியக் 24

## தென்னம்பிள்ளை

நல்லின ஊர் தென்னம்பிள்ளைகள் விற்பனைக்குண்டு.

**தொடர்புகளுக்கு : 071 858 4886**

(C-4707)



## பகிரங்க ஏலவிற்பனை

மாநகர சபையினால் பாவிக்கப்பட்ட பழைய மரங்கள், ரயர்கள், இரும்புகள், தளபாட உபகரணங்கள் மற்றும் பெரிய தோர் மலைவேம்பு அதன் ஏனைய பாகங்களும் மாநகரசபை வளாகத்தில் கீழ்க்குறிப்பிடப்படும் திகதியில் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன என்பதை அறியத்தருகின்றேன்.

**காலம் :- 19.12.2018 புதன்கிழமை**
**காலை :- 10.00 மணி**
**இடம் :- மாநகரசபை வளாகம்**

ஆணையாளர்,
யாழ்.மாநகர சபை,
யாழ்ப்பாணம்.
2018.12.15

(C-4709)


# ஜனாதிபதியின் செயற்பாடு...

கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான முஜிபூர் ரஹ்மான் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், ஜனாதிபதிக்கு இல்லாத ஒரு அதிகாரத்தை ஜோடித்து இதனை செயற்படுத்த அவர்கள் முயன்றனர். ஆனால் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களை கொண்டு உருவாக்கிய அரசாங்கத்தை முன்நோக்கி கொண்டுசெல்ல நேற்றுமுன்தினம் உயர் நீதிமன்றம் தடைவிதித்தது.

அதனை செய்யமுடியாமல் போனது. காரணம் நாட்டு மக்களின் கண்களில் மண்ணை தூவி முன்னெடுக்கப்பட்ட இச்செயற்பாடு தடுக்கப்பட்டது. ஆகவே இது யாப்பு ரீதியான சூழ்ச்சி என்றே கூற வேண்டும்.

ஏனெனன்றால் ஜனாதிபதிக்கு இல்லாத ஒரு அதிகாரத்தை அவர் இருப்பதாக எண்ணி செயற்பட்டார். அதன் காரணமாகவே இதனை யாப்பு ரீதியான சூழ்ச்சி என கூறுகின்றோம்.

ஜனாதிபதி சட்டவல்லுநர் இல்லை ஆகவே அவருக்கு இவ்வாறு ஆலோசனை வழங்கியது யார் என்பதை தேடிப்பார்க்க வேண்டும்.

ஆகவே ஜனாதிபதி ஆசனத்தில் அமர்ந்து கொண்டு இவ்வாறு சிறுபிள்ளை போல் செயற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றார். (ம)


## வீடு காணி விற்பனைக்கு

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய் (பலாலி வீதி 400m அருகாமை) கரந்தன் நீர்வேலி செல்லும் வீதியில் புதிதாக கட்டப்பட்ட வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு : 077 384 5608**

(6268)



## ஏசியன் தளபாடத்தின் மாபெரும் மலிவு விற்பனை

**தளபாடம் மற்றும் இலத்திரனியல் குளிர்சாதனப்பெட்டி**




**ஞாயிற்றுக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

இல. 230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 0217916911 / 0768219418 / 0773583879
(இலுப்பையடி - ஆனைப்பந்தி சந்திக்கு இடையில்)

(C-4708)



## வலயக் கல்வி அலுவலகம் - வலிகாமம். மருதனார்மடம், சுன்னாகம்.

## சிற்றுண்டிச்சாலை நடத்துவதற்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் கல்வி வலயத்துக்கான சிற்றுண்டிச்சாலையினை 01.01.2019ஆம் திகதி முதல் 31.12.2019 ஆம் திகதி வரை நடத்துவதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றது. கேள்விப் பத்திரங்களை "வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம், மருதனார்மடம், சுன்னாகம்" என்னும் முகவரிக்கு 26.12.2018 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சிற்றுண்டிச் சாலை நடத்துவதற்கான கேள்வி அறிவித்தல்" எனக் குறிப்பிடவும்.

**குறிப்பு :** இது தொடர்பான படிவங்களையும், மேலதிக விபரங்களையும் வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தின் கணக்குப் பகுதியில்-17.12.2018 ஆம் திகதி முதல் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

செ.சந்திரராஜா,
வலயக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம்.
15.12.2018

(C-4715)



மஞ்சவனப்பதி முருகன் துணை

## வாடிக்கையாளருக்கு ஓர் நற்செய்தி

யாழ். நகரில் முதல்முறையாக அனைத்து வாடிக்கையாளரதும் தேவை கருதி இன்றிலிருந்து எமது நிறுவனம் 24 மணித்தியால சேவையை வழங்குவதுடன் இன்றிலிருந்து 3 நாட்களுக்கு 16.12.2018 ஞாயிறுவரை ரூபாய் 3000/=இற்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு 10% விலைக்கழிவும், ரூபாய் 5000/= இற்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு 10% விலைக்கழிவுடன் எமது நிறுவனத்தில் இருந்து 6km சுற்றளவுக்குள் வசிப்பவர்களுக்கு கொள்வனவு செய்யும் பொருட்கள் இலவசமாக விநியோகிக்கப்படும்.

**முக்கிய குறிப்பு: தொலைபேசியூடாகவும் பொருட்கள் ஓடர் செய்யலாம்.**
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது : அங்கர், சீனி, மா தவிர்ந்த பொருட்கள்)


**SUNJEYS A to Z SUPER MART**
100, Arasady Road, Jaffna.
(இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்)
**021 205 3077**

(C-4714)


## 2ஆம் ஆண்டு மீளா நினைவுகளில்

### அமரர் நாகலிங்கம் புவனேந்திரன்

திதி : பூர்வபக்க அட்டமி



அன்பின் சிகரமாய் உயர்ந்து
ஆலமர விருட்சமாய் நிழல் தந்து
பாசமுடன் எமையெல்லாம் வளர்த்து
கூடியிருந்த நாட்கள் ஒவ்வொன்றும்
குதூகலமாய் இருந்து விட்டு
எம்மையெல்லாம் பரிதவிக்க விட்டு
எங்கு சென்றீர். ஈராண்டு கடந்து
சென்றது அப்பா நீர் சென்று
ஆறுமோ எம் துயர்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் - 25.02.1950
மறைவு - 07.12.2016

(7898)

முருகமூர்த்தி வீதி,
நெல்லியடி.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 23 • 03 • 1930



மறைவு 16 • 11 • 2018

அமரர்

### பொன்னம்பலம் கண்மணி

16.11.2018 அன்று இறையடி சேர்ந்த எமது குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியைகளில் பல வழிகளிலும் பங்குபற்றியோருக்கும், அனுதாபச் செய்திகளை எம்முடன் பகிர்ந்து எமக்கு ஆறுதளித்தோருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் எங்களின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் 15.12.2018 இன்று சனிக்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நாளை 16.12.2018 ஞாயிற்றுக்கிழமை பகல் 12.00 மணிக்கு அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். இந் நிகழ்வுகளில் கலந்து கொள்வதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(6705)

"ராணி பவன்"
பெரியதம்பிரான் கோவிலடி,
கம்பர்மலை, வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்
0212265479 / 021 205 5146 /
0212265014 / 0776441986


மஞ்சவனப்பதி முருகன் துணை

## வாடிக்கையாளருக்கு ஓர் நற்செய்தி...

மின்சாரத்தினால் (Electric Bike) இயங்கும் இருசக்கர வண்டி இன்று தொடக்கம் 16.12.2018 ஞாயிறு வரை கொள்வனவு செய்வோருக்கு ரூபாய் **85,000/=** பெறுமதியான இருசக்கர வண்டி விசேட விலைக்கழிவாக **75,000/=** இற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

**6 மாத உத்தரவாதம் வழங்கப்படும் (பற்றி உட்பட)**

யாழ் மாவட்ட ஏக விநியோகஸ்தர்
**SUNJEY'S HOLDINGS**
**No.98,** அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் இந்து மகளிர் கல்லூரி அருகில்)

**T.P : 077 386 4077 / 0777 474 111**

(C-4714)

# தேசத்தின் குரலுக்கு யாழ்.பல்கலையில் அஞ்சலி



தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் 12ஆம் ஆண்டு நினைவு தினம் யாழ். பல்கலைக் கழகத்தில் நேற்று இடம்பெற்றது. (படங்கள்:-சோபிகா)

# நீதிமன்ற தீர்ப்பு நியாயாதிக்கம் மீதான நம்பிக்கையை வலுப்படுத்தியுள்ளது

## ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் வரவேற்பு

(கொழும்பு)

**பாராளுமன்றக் கலைப்பு தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பானது எமது நாட்டில் நியாயாதிக்கம் மீதான நம்பிக்கையை மேலும் வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது என காணாமல் போனோர் அலுவலகத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.**



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதிய பிரதமராக மகிந்த ராஜபக்ஷவை நியமித்தமையால் நாட்டில் ஏற்பட்ட அரசியல் சிக்கல் நிலையைத் தொடரந்து, பாராளுமன்றத்தைக் கலைத்து கடந்த நவம்பர் மாதம் 9ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டார்.

அரசியலமைப்பிற்கு முரணான பாராளுமன்றக் கலைப்பு எனக் குறிப்பிட்டு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தது எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# ரணில் தரப்பு கோரிக்கையை நிராகரித்தது உயர்நீதிமன்றம்

(கொழும்பு)

மேன்முறையீட்டு நீதிமன்றின் தீர்ப்பை சவாலுக்கு உட்படுத்தி மகிந்த தரப்பால் தாக்கல்செய்யப்பட்ட மனுவை விசாரிக்க ஐவர் அடங்கிய நீதியரசர்கள் குழுவை நியமிக்குமாறு கோரி ரணில் விக்கிரமசிங்க தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

குறித்த மனு மீதான விசாரணை நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது உயர்நீதிமன்றம் குறித்த மனுவை நிராகரித்துள்ளது.

இந்நிலையில், மகிந்த தரப்பால் தாக்கல் செய்யப்பட்ட மனு மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிரதமர் பதவி மற்றும் புதிய அமைச்சரவைக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளது. அதற்கெதிராக மகிந்த தரப்பு உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த மனு விசாரிக்கப்பட்டு நேற்று வரை ஒத்தி வைக்கப்பட்டது.

இந்நிலையில், குறித்த மனுவை விசாரிக்க ஐவரடங்கிய அமர்வை நியமிக்குமாறு வலியுறுத்தி ரணில் விக்கிரமசிங்கவின் சட்டத்தரணியால் நேற்று முன்தினம் குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மைத்திரியின் குடியுரிமை பறிபோகும் அபாயம்!

(கொழும்பு)

அரசியலமைப்பை மீறி செயற்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் குடியுரிமை பறி போவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமைய, அரசியலமைப்பை மீறியுள்ளமை உறுதியாகி உள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தெரிந்தே அரசியலமைப்பை மீறினால் அதற்கு எதிராக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை தொடர்பில் அரசியலமைப்பின் 38ஆவது சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சட்டத்தின் முன் குற்றவாளியாகியுள்ளார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆணைக்குழு ஒன்றின் ஊடாக இவ்வாறான ஒருவரின் குடியுரிமையை இரத்து செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கொழும்பில் 11 தமிழர்கள் கடத்தல் வழக்கு மேலும் இரு கடற்படை அதிகாரிகள் கைது!

(கொழும்பு)

11 தமிழர்கள் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக மேலும் இரு கடற்படை அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வு பிரிவினரால் குறித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக நேற்று வெள்ளிக்கிழமை தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 2008 மற்றும் 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில், கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் 11 தமிழர்கள் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டனர்.

கடந்த ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில், நல்லாட்சி அரசாங்கத்தில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் கடற்படையின் முன்னாள் பேச்சாளர் உள்ளிட்ட அறுவர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# உயர்நீதிமன்ற நீதியரசர் ஈவா வனசுந்தர ஓய்வு

(கொழும்பு)

உயர் நீதிமன்ற நீதியரசர் ஈவா வனசுந்தர, ஓய்வு பெறப் போவதாக, உயர் நீதிமன்றத்தில் நேற்று அறிவித்தார்.

உயர் நீதிமன்றத்தில் 502ஆவது அறையில், நீதியரசர்களான ஈவா வனசுந்தர, புவனெக்க அலுவிஹார மற்றும் விஜித் மலல்கொட ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழு முன்னிலையில், மகிந்த ராஜபக்ஷவால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேன்முறையீட்டு மனு மீதான பரிசீலனை இடம்பெற்று வருகின்றது.



இந்த வழக்குக்காக, மேற்படி நீதியரசர்கள் குழாம் வந்து அமர்ந்ததை அடுத்து உரையாற்றத் தொடங்கிய நீதியரசர் புவனெக்க அலுவி ஹார, 40 வருடகாலச் சேவையை இன்றுடன் பூர்த்தி செய்யும் நீதியரசர் ஈவா வனசுந்தர, ஓய்வு பெறப் போகிறாரென அறிவித்ததோடு, அவருக்கான வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்டார். (இ-7)

# ஜனாதிபதியைக் கொல்லச்சதி போதிய ஆதாரங்கள் இல்லை

## ரொய்ட்டர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஆகியோரை கொலை செய்வதற்கான முயற்சிகள் இடம்பெற்றன என்ற குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கான போதிய ஆதாரங்கள் எவற்றையும் விசாரணையாளர்கள் கண்டுபிடிக்கவில்லை என ரொய்ட்டர் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பேச்சாளரிடம் கருத்து கேட்டபோது அவர் அதற்கு பதிலளிக்கவில்லை எனவும் ரொய்ட்டர் தெரிவித்துள்ளது.

சில வாரங்களுக்கு முன்னர் ஆங்கில ஊடகமொன்றிற்கு வழங்கிய பேட்டியில் தன்னை கொலை செய்வதற்கான முயற்சிகள் குறித்த விசாரணையில் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் தீவிர ஆர்வம் காட்டததன் காரணமாகவே அவரை பதவி விலக்கினேன் என ஜனாதிபதி தெரிவித்திருந்தார் என ரொய்ட்டர் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் உள்நாட்டு மோதல் இடம்பெற்ற காலப்பகுதியில் பல அரசியல் கொலைகள் இடம்பெற்றுள்ளதால் ஜனாதிபதியின் குற்றச்சாட்டுகள் மிகவும் பாரதூரமானவை எனவும் ரொய்ட்டர் தெரிவித்துள்ளது.

கொலைக்குற்றச்சாட்டு விவகாரத்தில் உண்மை என்னவென்பதை கண்டறிவது கடினமாகவுள்ளது என தெரிவித்துள்ள மேற்குலக இராஜதந்திரியொருவர் பலர் ஜனாதிபதியைக் கொலை செய்வதற்கான முயற்சி குறித்து தெரிவிக்கப்படுவதை சந்தேகத்துடன் நோக்குகின்றனர் எனவும் ரொய்ட்டர் தெரிவித்துள்ளது.



கொலைச்சதி முயற்சி குறித்த தகவலை வெளியிட்ட நாமல்குமாரவிற்கும்முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபருக்கும் இடையிலான தொலைபேசி உரையாடல்களில் ஆதாரங்கள் உள்ளதாக பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர ரொய்ட்டருக்கு தெரிவித்துள்ளார்.

எனினும் நாமல் குமாரவின் குற்றச்சாட்டுகளுக்கு அப்பால் உறுதியான ஆதாரங்கள் எதனையும் கண்டுபிடிக்கமுடியவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் வெளிநாட்டு செய்தியாளர்களை சந்தித்தவேளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கொலை சதி முயற்சியின் பின்னால் முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகாயிருக்கலாம் எனத் தெரிவித்திருந்தார் எனவும் ரொய்ட்டர்ஸ் குறிப்பிட்டுள்ளது.

முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்க சினைப்பர் என கருதப்படும் நபர் குறித்தும் மைத்தி தெரிவித்திருந்தார்.

எனினும் பொன்சேகா குறித்து தற்போது எந்த விசாரணையும் இடம்பெறவில்லை என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

காணாமல்போன சினைப்பர் குறித்து தான் எதனையும் அறியவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார் என ரொய்ட்டர் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

# இந்திய பந்துவீச்சாளர்கள் ஏமாற்றம் அவுஸ்திரேலியா அசத்தல் ஆரம்பம்

பெர்த் டெஸ்ட்டின் முதல் நாள் ஆட்டத்தில் இந்திய பந்துவீச்சாளர்கள் தடுமாற, முதல் இன்னிங்சில் அவுஸ்திரேலிய அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 277 ஓட்டங்களை எடுத்துள்ளது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. அடிலெய்டில் நடந்த முதல் டெஸ்டில் வெற்றி பெற்ற இந்திய அணி 1-0 என தொடரில் முன்னிலை வகிக்கிறது. இரு அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் பெர்த்தில் நேற்று ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பெய்ன் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். இந்திய அணியில் காயம் காரணமாக அஷ்வின், ரோகித் சர்மா நீக்கப்பட்டு ஹனுமா விஹாரி, உமேஷ யாதவ் சேர்க்கப்பட்டனர். சுழற்பந்து வீசசாளர்கள் யாரும் இடம் பெறவில்லை. அவுஸ்திரேலிய அணியில் மாற்றம் செய்யப்படவில்லை.

அவுஸ்திரேலிய அணிக்கு பின்ச், ஹரிஸ் ஜோடி சுப்பர் ஆரம்பம் கொடுத்தது. இருவரும அரைசதம் அடித்தனர். இந்திய வேகபந்து வீச்சாளர்கள் 'வேகத்துக்கு' சாதகமான ஆடுகளத்தில் விக்கெட்டுக்களை வீழ்த்த தவறினர். பின்ச் (50), ஹரிஸ் (70) அரைச்சதம் அடிக்க கவாஜா (5), ஹேண்ட்ஸ்கோம்ப் (7) ஒற்றை இலக்க ஓட்டங்கள் எடுத்தனர். ஹெட் 58 ஓட்டங்கள் எடுத்தார். முதல் நாள் முடிவில் முதல் இன்னிங்சில் அவுஸ்திரேலிய அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 277 ஓட்டங்களை எடுத்திருந்தது. கம்மின்ஸ் (11), பெய்ன் (16) ஆட்டமிழக்காமல் இருந் தனர்.


IBC தமிழ்

NOBLE INTERNATIONAL Papers Lanka (Private) Limited

## Join Our Team

**NOBLE INTERNATIONAL PAPERS LANKA (PRIVATE) LIMITED**

We are a leading pioneer Paper industry located in the industrial state Atchuvely Jaffna is looking forward for a dynamic and enthusiastic Maintenance Technician or Engineering Assistant, Accounting executive and store keeper and who should have any of the following qualifications.

### Maintenance Technician or Engineering Assistant

*The ideal candidate should be:*

- NDT/NDES/HNDE in Mechanical Engineering with more than one year experience in the relevant field.
- NCT in Mechanical Engineering with more than two years of experience in a paper industry or in any machinery maintenance industry.
- The sound knowledge in communication in English and IT with technical writing are the two more added advantages to this position.

The person will work under the direct supervision of the Mechanical Engineer and will be responsible for performing general maintenance and repairs on all machinery equipment in compliance with safety rules and regulations.

### Accounting Executive

*The ideal candidate should be:*

- Full qualified in AAT or partly qualified in ICASL/CIMA/ACCA.
- Minimum 2 year experience in computerized accounting.
- Exposure in all finance, tax and company aspects.
- Good command in English and IT.
- Below 25 years of age.

### Store Keeper

*The ideal candidate should be:*

- Full qualified in AAT or partly qualified in ICASL/CIMA/ACCA.
- Minimum 2 year experience in computerized inventory management.
- Be able to work independently, while being a supportive team player.
- Age should be able 40 Years.

**Special consideration will be given for participation who have minimum 3 year experience.**

Those who meet the specified criteria should send application letter, CV with the details of two non-related referees to: noblehrm5@gmail.com on or before 20 December 2018



## St.John's Academy & College of Technology

TVEC

TVEC Registration No.P25/0076

Closing Date for Applications : 02.01.2019
Course duration : Six Months
Course Commencement : 9th January 2019

G.C.E. O/L = NVQ 3
G.C.E. A/L = NVQ 4

Boys & Girls Apply Immediately! ADMISSION 2019

**Available NVQ Courses**

- Computer Hardware Technician - NVQ Level - 03 & 04
- Information and Communication Technology - NVQ Level - 03 & 04
- Electrical Wiring - NVQ Level - 03
- Plumbing - NVQ Level - 03
- Radio, T.V. & Allied Equipment Repairer - Mobile Phones
- Hotel & Restaurants Management (Front Office Operations)
- Additional Subjects for NVQ 3 Students:
  English Language, Mathematics, Sinhala Language
  **St.John's College Continuing Educations (TVEC Reg. No: P25/0077)**
- Pre School Teacher NVQ Level - 03
- Introduction to working in an Office - NVQ Level - 03
- Spoken Sinhala Certificate Courses (for office staff & students)

தொழில் உறுதி

AAT

Take AAT in English Medium or Tamil Medium parallel to Advanced Level

- Stage 1 Course Commences in January - Exams Following January
- Stages II Course Commences in February - Exams July (Same Year)
- Stages III Course Commences in August - Exams Following January
- **For more details, contact, Mr.s.Gobinath, The Director, St.John's Academy & College of Technology, 446 main Street, Chundikuli Jaffna.**

Tel: 021 222 24 32, 071 856 1252 (C-4710)



# VACANCY

**St.John's College Jaffna and st.John's Academy and College of Technology**

Applications are called from qualified persons to teach the following subjects:

- NVQ Pre School Teacher - Level 3 - (English Medium)
- NVQ Computer Hardware Technician - Level 4
- NVQ Information & Communication Technology - Level 4
- Sinhala as a Second Language - Grades 6 - A/L
- Special Education (Austism and others) - Primary & Secondary
- Science for Technology A/L
- General Information Technology (G.I.T) & Information & Communication Technology (I.C.T) - (English Medium & Tamil Medium) - A/L
- Logic & Scientific Methods - A/L

Applications are also called for:

- Journalist cum Editor - College Publications (English)

Qualified persons are requested to send complete CVs including the contact details of two non-related referees by post on or before 20th December 2018 to the address below. Only shortlisted candidates will be called for an interview.

**Principal**
**St.John's College, Jaffna**

(C-4710)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திருமதி வி.சந்திரசேகரன்**
ஆசிரியர்
(நுண்கலைமாணி, PGDE)



**திரு. பே.தனபாலசிங்கம்**
அதிபர்
(BA,BED, DSM (merit)



**திருமதி வி.கேதீஸ்வரன்**
ஆசிரியர்
(பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வி)

14.12.2018 நேற்றைய தினம் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வட மாகாண சாதனையாளர் கௌரவிப்பு விழாவில் மாகாண நிலை "குரு பிரதீபா பிரபா" விருது பெற்ற எமது அதிபர் திரு. பே.தனபாலசிங்கம் அவர்களையும் ஆசிரியர்களான திருமதி வி.சந்திரசேகரன், திருமதி வி.கேதீஸ்வரன் ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல விருதுகள் பெற வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் கழகம்,**
**யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை, கொக்குவில்.**

(C-4705)



## 1ம் ஆண்டு நினைவு



மலராக 28.04.1964

சருகாக 26.12.2017

திதி: அட்டமி 15.12.2018

## அமரர் பாரதிதாசன் தங்கமலர்

அம்மா! எங்கள் உயிரில்; உணர்வில்; உயர்வில் ஏணியாய் நின்று ஏற்றி வைத்த குடும்ப விளக்கே என்றும் உம் நினைவுகளுடன் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

**பிருந்தாவனம்,**
**அல்வாய் வடக்கு.** (C-4717) **குடும்பத்தினர்**

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான 01.01.2019-31.12.2019 வரையுள்ள காலப்பகுதிக்கான குத்தகை-மீள் கேள்வி அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான மீள் கேள்விகள் 31/10/2018ஆம் திகதிய வலம்புரி தினக்குரல் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றன.

மேலும் மாடு,ஆடு இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு எடுத்துக் கொள்பவர்கள் எம்மால் வழங்கப்படும் மாடு/ஆடு கொள்வனவுக்கான படிவத்தினை பூரணப்படுத்தி தலைவர்/செயலாளரின் அனுமதி ஒப்பத்தினைப் பெற்றதன் பின்பே கொல்களத்தில் ஆடு/மாட்டினைக் கட்டலாம் எனும் நிபந்தனையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

01. கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதி திகதி :-20.12.2018 பி.ப. 3.00 மணி வரை
02. கேள்விப்பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :-21.12.2018 காலை 10.00 மணி வரை
03. கேள்விகள் திறக்கப்படும் திகதி :-21.12.2018 காலை 10.30 மணி

மீள் கேள்வி அறிவித்தல் அட்டவணை

| தொ.இல | குத்தகை விபரம் | 2019 இல் ஆகக் குறைந்த கேள்வித் தொகை(வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரக் கட்டணம்(வரிகள் நீங்கலாக) | மாத வாடகை(வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | நெல்லியடி உப அலுவலகம் | | | | |
| 1 | கொட்டடிச்சந்தை | 6000.00 | 500.00 | 500.00 | - |
| 2 | நெல்லியடி மாட்டிறைச்சிக்கடை | 572500.00 | 5750.00 | 500.00 | 100.00 |
| 3 | நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை | 46400.00 | 500.00 | 500.00 | 100.00 |
| 4 | கோயிற் சந்தை கோழியிறைச்சிக்கடை | 188000.00 | 1900.00 | 500.00 | 100.00 |
| 5 | நெல்லியடிச் சந்தை கோழிக்கடை | 652115.00 | 6550.00 | 500.00 | 100.00 |
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | | | |
| 6 | உடுப்பிட்டி சந்தை | 814100.00 | 8200.00 | 500.00 | - |
| 7 | மண்டான் சந்தை | 45000.00 | 500.00 | 500.00 | - |
| 8 | உடுப்பிட்டிச் சந்தை கோழி இறைச்சிக்கடை | 251500.00 | 2600.00 | 500.00 | 100.00 |
| 9 | அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 623100.00 | 6300.00 | 500.00 | 100.00 |
| 10 | சாண்டா சந்தை கோழிக்கடை | 57600.00 | 600.00 | 500.00 | 100.00 |
| | கட்டைவேலி உப அலுவலகம் | | | | |
| 11 | துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 41850.00 | 500.00 | 500.00 | 100.00 |

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி
நெல்லியடி பழைய சந்தை துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம்
01-01-2019 தொடக்கம் 30-06-2019 வரையுள்ள காலப்பகுதிக்கான குத்தகை-
கேள்வி அறிவித்தல்.

01. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் தன்மை குறிப்பிட்டு, உரிய தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ, அல்லது தலைமை அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்தில் சேர்ப்பிப்பதன் மூலமாகவோ கிடைக்கச் செய்தல் வேண்டும். அதன் இரண்டாவது பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால்மூலம் அனுப்புதல் வேண்டும்.

02. கேள்விப்பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையை கொண்டு வருவதுடன், அதன் நிழற்படப் பிரதியையும், கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.

03. துவிச்சக்கரவண்டிகளையும் மோட்டார் சைக்கிளையும் நிறுத்தி வைப்பதற்கு போதுமான அளவில் இடவசதி ஒதுக்கப்பட்டிருப்பதுடன் பாதுகாப்பும் வழங்கப்படவேண்டும். பற்றுச்சீட்டை வழங்கி கட்டணம் அறவிடமுடியும்.

04. மேற்கூறிய நிபந்தனைகளுக்கு அமைய குத்தகைக்காரர் நடக்கத் தவறுவாராயின் அல்லது அக்கடைக்கான குத்தகை உடன்படிக்கையில் குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறி குத்தகைக்காரர் நடப்பாராயின் எந்த நேரத்திலும் குத்தகைக்காரரை வெளியேற்றவும் அல்லது குத்தகையை இரத்துச் செய்யவும், குத்தகை நடைபெற்ற காலப்பகுதிக்கான நிலுவையினை சட்ட நடவடிக்கை மூலம் அறவீடு செய்யவும், பாதுகாப்புப் பிணைப்பணத்தை மீள வழங்காது முறையான அறிவித்தல் கொடுத்து எஞ்சி இருக்கும் காலத்திற்கு குத்தகையை கேள்விக்கு அல்லது ஏலத்தில் விடுவதற்கும் குத்தகை கொடுப்பவர்களிற்கும் உரிமை உண்டு.

கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித் திகதி :-20.12.2018 பி.ப. 3.00 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :-21.12.2018 காலை 10.00 மணி வரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி :-21.12.2018 காலை 10.30 மணி

| தொ.இல | குத்தகை விபரம் | 2019 இல் ஆகக் குறைந்த கேள்வித் தொகை(வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரக் கட்டணம்(வரிகள் நீங்கலாக) | மாத வாடகை(வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | நெல்லியடி உப அலுவலகம் | | | | |
| 1 | நெல்லியடி பழைய சந்தை - துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் | 45000.00 | 500.00 | 500.00 | - |

க.த.ஐங்கரன்,
தவிசாளர். (சி-4697)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

# சு.கவின் 9 எம்.பிக்கள் ஐ.தே.கவிற்கு ஆதரவு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளதாக நம்பகரமான அரசியல் வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது.

சு.கவின் தேசிய அமைப்பாளரான துமிந்த திஸாநாயக்க தலைமையில் நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்க முடிவெடுத்துள்ள மேற்படி எம்.பிக்கள், ஐ.தே.க. தலைமையில் அமையவுள்ள புதிய ஆட்சியில் பங்காளிகளாக சங்கமிக்கவுள்ளனர்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற சந்திப்பின் போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தனிப்பட்ட ரீதியில் சந்தித்து தமது நிலைப்பாட்டை குறித்த உறுப்பினர்கள் அறிவித்துள்ளனர்.

இதற்குப் பதிலளித்துள்ள ஜனாதிபதி, "ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து மீண்டும் ஆட்சியமைக்கமாட்டேன். தனியாட்சி அமைப்பதற்குரிய பெரும்பான்மையை ஐக்கிய தேசிய முன்னணி நிரூபித்துள்ளது.

எனவே, தனிப்பட்ட ரீதியில் நீங்கள் எடுக்கும் அரசியல் முடிவுக்கு தடையாக இருக்க மாட்டேன்" என்று கூறியுள்ளார்.

துமிந்த திஸாநாயக்க, மகிந்த சமரசிங்க, விஜித் விஜயமுனி சொய்சா, லசந்த அழகியவன்ன, பைசர் முஸ்தபா, லக்ஷ்மன் செனவிரத்ன, வீரகுமார திஸாநாயக்க உட்பட மேலும் சிலரே ஜனாதிபதியை தனிப்பட்ட ரீதியில் சந்தித்துள்ளதாக தெரிய வருகிறது. (இ-7)

# மண் கொண்டு சென்றவருக்கு 10 ஆயிரம் ரூபாய் அபராதம்

(கரணவாய்)

அனுமதிப் பத்திரமின்றி மண் கொண்டு சென்ற நபர் ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்ததுடன் மணலை பறிமுதல் செய்யுமாறு பருத்தித்துறை பதில் நீதிபதி குமாரசுவாமி உத்தரவிட்டார்.

அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்ற போது நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அல்வாய் பகுதியைச் சேர்ந்த நபரை நேற்று முன்தினம் வியாழக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் பதில் நீதிபதி முன்னிலையில் முற்படுத்திய போதே அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (இ-60)

## வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்

மேற்படி வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 2019 இல் நடைபெற இருப்பதால் இதுவரை அங்கத்துவம் பெற்றுக் கொள்ளாத வட பிரதேசத்திலுள்ள பொது அமைப்புக்கள் (ஆலய பரிபாலன சபைகள் உட்பட) எதிர்வரும் 15.01.2019 இற்கு முன் எழுத்து மூலம் விண்ணப்பிக்கலாம்.

புதிய அங்கத்துவம் பெறும் பொது அமைப்புக்கள் வருடாந்த சந்தாப்பணமாக 200/- ஐ பொதுக் கூட்டத்திற்கு முன் செலுத்தி பொதுக் கூட்டத்தில் பங்கு கொள்ளலாம்.

பட்டின சபை வீதி,
சங்கானை. (7894)

செயலாளர்,
வடபிரதேச நல்லொழுக்க
சம்மேளனம்.

# இராசி பலன்

15.12.2018
கார்த்திகை 29, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.19 மணிக்கு
அட்டமி பின்னிரவு 3.14 மணிவரை
பூரட்டாதி முன்னிரவு 10.52 மணிவரை
சுபநேரம் 3.21-4.37 மணிவரை
இராகுகாலம் 9.21-10.51 மணிவரை
வளவன்

கிரகநிலை: செவ்.சந் | ராகு | கேது | சனி | குரு.புத.சூரி | சுக்

சந்திராஷ்டமம்
மகம், பூரம்
பகல் 4.01 மணிக்கு
மீன-சந்

**மேடம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**இடபம்** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன நன்மையுண்டு, ஆரோக்கியமான நாள்.

**மிதுனம்** தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், பொல்லாதவர்கள் உங்களைவிட்டு விலகலாம்.

**கடகம்** கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும், எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.

**சிம்மம்** பால்ய நண்பர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கன்னி** செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**துலாம்** பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம்.


**விருச்சிகம்** நண்பர்கள் மூலம் சுபதகவல்கள் வந்து சேரலாம், எடுத்த கருமங்களில் தீவிரம் காட்டுவீர்கள், ரோக பயமுண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**தனுசு** உறவினர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புத்திசாதுரியமாக நடந்து காரியம் சாதிப்பீர்கள்.

**கும்பம்** மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், போசன சுகமுண்டு, மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், கனவு பலிதமுண்டு.

**மீனம்** பயணங்களால் உடல் சோர்வு ஏற்படலாம், தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, தொழிலில் சிறு மாற்றங்கள் செய்ய முற்படுவீர்கள்.





நல்லூர் சிவன் கோவில் என அழைக்கப்படும் ஸ்ரீகமலாம்பிகை சமேத ஸ்ரீகைலாசநாத சுவாமி தேவஸ்தான மஹோற்சவம் நேற்றுக் காலை 7 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 24 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (படங்கள்:- ஐ.சிவசாந்தன்)

# யாழில் உருளைக்கிழங்கு விநியோகத்தில் பாகுபாடு

## விவசாயிகள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சம்மேளனங்கள் ஊடாக இடம்பெற்ற உருளைக்கிழங்கு விநியோகத்தில் அரச அதிகாரிகளால் பாகுபாடு காட்டப்பட்டதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அரசாங்கத்தால் 50 வீத மானிய அடிப்படையில் பழைய பதிவில் உள்ள விவசாயிகளுக்கு 3 அந்தரும் புதிய பதிவில் உள்ளவர்களுக்கு இரு அந்தரும் உருளைக்கிழங்கு வழங்கப்படும் எனத் தெரிவித்தபோதும் அவ்வாறு வழங்கப்படவில்லையென பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்தனர்.

உருளைக்கிழங்குச் செய்கையில் அதிக விளைச்சலைத் தருகின்ற "றெட் வெட்சோடா" (சிவப்புக் கிழங்கு) தாம் தொடர்ந்து பயிரிட்டு வந்ததாகவும் இதன்மூலம் அதிக விளைச்சலையும் வருமானத்தைப் பெற்றதாகவும் தெரிவித்தனர்.

ஆனால் தற்போது "பரா" என்ற இனக் கிழங்கையே தமக்கு கூடுதலாக விநியோகித்ததாகவும் இக் கிழங்குகின் விளைச்சல் தொடர்பில் தாம் அறிந்திருக்கவில்லை எனத் தெரிவித்தனர்.

உருளைக்கிழங்கு விநியோகத்திற்கு கடந்த மாதம் 22 ஆம் திகதி பணத்தை செலுத்தி இம் மாதம் 10 ஆம் திகதியே உருளைக் கிழங்கை தாம் பெற்றதாகவும் தமக்கு உரிய பதிவின்படி கிழங்கு வழங்கப்படவில்லை என கடந்த மாதம் 22 ஆம் திகதியில் இருந்து கிழங்கை பெற்ற திகதி வரை பலமுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தமக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பில் எடுத்துக் கூறியும் நடவடிக்கை எடுக்கவில்லையென பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்தனர்.

இதேவேளை தமக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாக யாழ்.அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக யாழ். மாவட்ட விவசாயப்பணிப்பாளர் திருமதி.கைலேஸ்வரனிடம் தொடர்பு கொண்டபோது ஒரு சில தவறுகள் இடம் பெற்றதைத் தான் அறிந்ததாகவும் அதற்கான தீர்வுகளை வழங்கியுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் உரிய காலத்தில் தன்னுடன் தொடர்பு கொண்டால் அதற்கான தீர்வு பெற்றுத்தரப்படும் என உறுதியளித்தார்.

இதேவேளை உரும்பிராய் விவசாயிகள் சேவை சம்மேளன அபிவிருத்தி உத்தியோகத்தரை தொடர்பு கொண்டபோது இறக்குமதி செய்யப்பட்ட சிவப்பு உருளைக்கிழங்குக்குத் தடை விதிக்கப்பட்டமையே இதற்குக் காரணம் எனத் தெரிவித்தார். (இ)

# டெங்கு ஒழிப்பு நாளை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கருகம்பனை தமிழ்மன்றம் சனசமூகநிலையம், இந்து இளைஞர்கழகம், இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் என்பன இணைந்து நடத்தும் மாபெரும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை நாளை 16 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணியளவில் கருகம்பனை தமிழ்மன்ற சனசமூக நிலைய முன்றலில் ஆரம்பமாகும். இந் நடவடிக்கையானது கீரிமலை நகுலேஸ்வரம் கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களை உள்ளக்கியுள்ளது. எனவே இளைஞர்கள், யுவதிகள், கிராமத்தவர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இது வலி.வடக்கு பிரதேச சபை அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையாகும். (இ-5)



யாழ்.கிறீன் பீல்ட் சனசமூக நிலைய கணனி நூலகத்திற்கு கனடா வாழ் குயின்ரஸ் இரண்டு கணனிகளையும், லிற்ரர் ஒரு கணனியையும் வழங்கியுள்ளனர். இங்கு திங்கள்,புதன், வெள்ளி ஆகிய தினங்களில் இலவச கணனிப்பயிற்சிகள் நடைபெறுகின்றன.

# குற்றம் செய்பவர்களுக்குத் தண்டனை! நல்லவேலை செய்பவர்களுக்கு பாராட்டு

## வடக்கு ஆளுநர் கூரே தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

குற்றம் செய்பவர்களுக்குத் தண்டனை கொடுப்பதைப் போன்று நல்ல வேலை செய்பவர்களுக்குப் பாராட்டுவிழா நடத்துவது அவசியமானது.

அந்தவகையில் இந்த முன்பள்ளி ஆசிரியர்களை நான் பாராட்டுகின்றேன் என வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

பெரியவர்களுக்கு படிப்பு சொல்லிக்கொடுப்பது பெரிய காரியமல்ல. ஆனால் இந்த முன்பள்ளி குழந்தைகளுடன் செயலாற்றுவது மிக மிக கஷ்டமான காரியம்.

அவர்களைப் பாராட்டி உற்சாகப்படுத்துவது மேலும் மேலும் அவர்களின் சேவை வளர உதவும்.

முன்பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் தகைமை புலமை மட்டும் இருந்தால் போதாது. அவர்களுக்கு அன்பு, கருணை, பாசம் போன்றவை இருக்க வேண்டும்.

குழந்தைகள் மீது ஒரு தாய் போன்ற பாசம் காட்ட வேணும். வீட்டிலே கிடைக்காத அன்பு முன்பள்ளியிலே கிடைக்க வேண்டும்.

அப்போதுதான் அவர்கள் சிறந்த குழந்தைகளாக வளர்வார்கள். குழந்தைகளின் முகத்தில் இனம் தெரியாது. மதம் தெரியாது. என்ன சாதி என்று தெரியாது அவர்கள் அனைவரும் குழந்தைகளாக மட்டுமே தெரிவார்கள். அவர்களை குழந்தையிலிருந்தே ஒற்றுமையாக வாழப்பழக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் வட மாகாண முன்பள்ளியின் கண்காட்சியும் கலாசார விழாவும் நேற்று முன்தினம் இடம் பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-9)

# அங்கத்தவர் இணைப்பு ஆரம்பம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர இளைஞர் கழகம் சாவகச்சேரி நகரசபையோடு இணைந்து நூலகங்களுக்கான அங்கத்தவர்களை இணைக்கும் திட்டத்தை நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தது.

சாவகச்சேரி நகர இளைஞர் கழகத்தின் தலைவர் மு.தனுராஜ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நகராட்சி மன்ற தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் விருந்தினராக கலந்து கொண்டு அங்கத்தவர்களுக்கான பதிவுகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் நகரசபை உறுப்பினர் திருமதி ர.லலிதாராணி, முன்னாள் நகரசபை உறுப்பினர் ஞா.கிஷோர் மற்றும் நகராட்சி மன்ற நூலகர் உட்பட இளைஞர் கழக உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர். இவ்வேலைத்திட்டம் எதிர்வரும் 31ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது. நூலக அங்கத்தவர்களாக இணைய ஆர்வமுள்ள மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர் சாவகச்சேரி நகர இளைஞர் கழகத்துடனோ அல்லது நகரசபையின் பிரதான நூலகத்துடனோ தொடர்புகொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (இ-89)

# 48 வர்த்தக நிலையங்கள் எட்டு உணவகங்கள் மீது திடீர் சோதனை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் இவ்வாரம் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது ஒரு உணவகமும் ஒரு வர்த்தக நிலையத்துக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தேசிய உணவு வாரத்தை முன்னிட்டு காரைநகர் பிரதேச பொதுச்சுகாதார பரிசோதகர்களால் காரைநகர் பிரதேசத்தில் உள்ள உணவகங்கள் வர்த்தக நிலையங்கள் மீது திடீர் சுற்றிவளைப்புக்கள் இவ்வாரம் இடம் பெற்றது

இந்த சுற்றிவளைப்புக்களில் 48 வர்த்தக நிலையங்கள், 8 உணவகங்கள் மீது சுகாதாரப் பரிசோதகர்களால் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சோதனை நடவடிக்கையின் போது சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய ஒரு உணவகமும் பாவனைக்கு உதவாத பொருட்களை விற்பனை செய்த ஒரு வர்த்தக நிலையமும் முற்றுகையிடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இவ் வர்த்தக உணவக உரிமையாளர்களுக்கு எதிராக உணவுச் சட்டத்தின் கீழ் நாளை மறுதினம் 17 ஆம் திகதி திங்கட்கிழமை ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ)

# 4 வயது குழந்தைக்கு சூடுவைத்த தாய் கைது

(கொழும்பு)

தனது தாயால் இரும்பு கரண்டியால் சுடப்பட்ட 4 வயது குழந்தை ஒன்று கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் தொடர்பில் குறித்த குழந்தையின் தாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி, அலவதுகொட பகுதியைச் சேர்ந்த 4 வயதுடைய குழந்தை தனது ஆடையில் சிறுநீர் கழித்த காரணத்திற்காக தாய் சூடு வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பின்னர் இந்த சம்பவம் தொடர்பில் குழந்தையின் தந்தையால் அலவத்துகொட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் குறித்த பெண்ணை கைது செய்துள்ளதுடன் சம்பவம் தொடர்பில் அலவத்து கொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)


## JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE

**தேசிய தொழிற்றகைமை (NVQ) சான்றிதழ் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரல்**

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற பயிற்சி நெறிகள் க.பொ.த (உயர்தரம்) சித்தியடையாதோர்,பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதோர் தேசிய தொழிற்றகைமை மூலம் பட்டதாரி ஆகும் வாய்ப்பு.

**Field Assistant Agriculture** (விவசாய வெளிக்கள உதவியாளர் பயிற்சி நெறிகள்)

1. **தேசிய தொழிற்றகைமை மட்டம் 3 (4 மாத காலப்பயிற்சி நெறி)**
   தகைமை க.பொ.த. சாதாரண தரம் கற்றிருப்பதுடன் 16-24 வயதிற்குட்பட்டவராக இருத்தல்
2. **தேசிய தொழிற்றகைமை மட்டம் 4 (ஒரு வருட காலப்பயிற்சி நெறி)**
   தகைமை NVQ மட்டம் 3 அல்லது க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்திருப்பதுடன் மேலதிகமாக விவசாய பாடத்திலும் சித்தியடைந்திருப்பதுடன் 16-26 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

பயிற்சி கட்டணம் இலவசம்

பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் 20.12.2018 காலை 9.00 எமது நிறுவனத்தில் நடைபெறவிருக்கும் நேர்முகப்பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்வி தகைமை சான்றிதழ்கள்,கிராம சேவையாளரின் நற்சான்றிதழ், வேறு இரு நற்சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.

மேலதிக விபரங்கள்
அதிபர், யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார் மடம்,
சுன்னாகம்.

தொலைபேசி இலக்கம் 077 240 6625
E.Mail:- jcinstituteofagriculture
(C-4688)

## "சொர்க்கம் திருமண சேவை"

அமெரிக்காவில் (USA) வசிக்கும் 29 வயதுடைய செவ்வாய் குற்றம் உள்ள பட்டதாரி மணமகனுக்கு தகுந்த இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த மணமகளைத் தேடுகிறோம். கனடாவில் வசிக்கும் 32 வயதுடைய Engineer ஆக பணிபுரியும் மணமகனுக்கு பட்டதாரி மணமகளைத் தேடுகிறோம். கனடாவில் வசிக்கும் 30 வயதுடைய மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகிறோம்.

தொடர்புகளுக்கு
T.P.& Viber:- 00141 6666 1855,
001 6475 043336 &
F.b:-sorkham matrimony
(C-4701)

## நல்லூர் பாம் சென்ரர்

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட், ஊர்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும்.
(கிறேட்டென் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு)

நல்லூர் பாம் சென்டர்,
19, முருகேசர்லேன், நல்லூர்.
(C-6702)

## ஓம் ஸ்ரீ சிவபார்வதி ஜோதிட நிலையம்

**ஓலைச்சுவடிகள் மூலம் காண்டம் வாசிக்கப்படும்**

வட்டுக்கோட்டை சங்கரத்தை சந்திக்கு அருகில்,
திருமணத்தடை, புத்திரபாக்கியம்/புத்திரபாக்கியத்தடை, தொழில் வியாபாரம் தடைகள், வெளிநாட்டு பயணத்துக்கான பரிகாரம், முற்பிறப்பு தோஷங்கள் விலகல் போன்றவற்றுக்கான பரிகாரங்கள், வவுனியா பண்டாரிக்குளத்திலும்...
(புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு - யாழ்ப்பாணம்)
(திங்கள், செவ்வாய், - வவுனியா)
(C-4645)

தொடர்புகளுக்கும் முன்பதிவுகளுக்கும்:- 076 328 7119

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 221 7603, 021 567 1532

## BRITISH COLLEGE OF ENGLISH

**IELTS** Academic + General
**IELTS** Life Skills

**Cambridge English Courses**
- Cambridge Preliminary Test (PET) (B1)
- Cambridge First Certificate in English (FCE) (B2)
- Cambridge Advanced English (CAE) (C1)

- 2004 ஆம் ஆண்டு எமது கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து இதுவரை சுமார் 5000 மாணவர்கள் IELTS இல் சித்தியடைந்து UK, Australia, Canada, USA போன்ற நாடுகளில் நிரந்தரமாக வசித்து வருகின்றனர்.
- A1, பரீட்சையில் சுமார் 750 இற்கு மேல் City & Guilds மற்றும் IELTS - Life Skills பரீட்சையில் நமது நாட்டு இல்லத்தரிசிகள் சித்தியடைந்து UK ல் வசித்து வருகின்றனர்.

University of Cambridge Certificate வாழ்நாள் முழுவதும் பயன்படுத்தக்கூடியவை. Cambridge English Qualification Registration Centre for the British Council.

வகுப்புக்கள் நடைபெறும் இடம்

**JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPARTMENT**
NO.464, Hospital Road, Jaffna.
075 261 3659
077 880 3887

## மணிவிழா வாழ்த்து





**திருமதி. கடம்பமலர் விமலராஜா**
அதிபர் தரம்-1 (BA,MED)

**அதிபர்,யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்**

இன்று மணிவிழா காணும் திருமதி கடம்பமலர் விமலராஜா அவர்களின் கல்விச் சேவையை பாராட்டி அவரின் ஓய்வுக்காலம் சீரும் சிறப்புடனும் அமைய இறை அருளை வேண்டுகின்றோம்.

(C-4695)

கோட்டக்கல்விப்பணிப்பாளர், அதிபர்கள்,
நல்லூர் கல்விக் கோட்டம்.

## மணிவிழா நாயகியாம் நயினையாள் புத்திரியை மனமார வாழ்த்துகின்றோம்





**சேவை விபரம்**
ஆசிரியர்: 02.05.1983-27.05.1986
வ/முதலியார்குளம் அ.த.க.பாடசாலை
ஆசிரியர்: 28.05.1986-27.07.1992
வ/நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம்
ஆசிரியர்: 28.07.1992-09.07.2009
யா/கோண்டாவில் இந்துக்கல்லூரி
அதிபர்: 10.07.2009-14.12.2018
யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்

**திருமதி. கடம்பமலர் விமலராஜா**
அதிபர் தரம்-1 (BA,MED)

அகவை அறுபதில்
ஆனந்தமாய் இளைப்பாறும்
அன்பு கொண்டிலங்கிய
நல் அதிபரே
பல்துறைகாண் பயின்றீர் –அதை
மாணாக்கர் மனங்களில்
அள்ளி அனைத்து
அமுதாய் ஊட்டி நின்றீர்
அன்பினிலே மனிதம் இட்டு
அதை நாள் தோறும்
கூறி நின்றீர்

இதய சுத்தியுடன் இணைந்து
ஈடிணையிலா சேவைதனை
இதமாக நிறைவேற்றி–இன்புறும்
இவ் இனிய வேளையில்–எம்
இதயத்தில் இடம்பிடித்த
நல் அதிபரே
நயினையாள் பதம்பணிந்து
நற்துணை விமலராஜாவுடனும்
பற்றுடை மகன் மகளுடனும்
நீடூழி காலம் நலம்பெற்று
வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகத்தினர்
கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்
(C-4703)

# மடுதேவாலயத்தை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்துவதை ஒத்திவைக்குமாறு கோரிக்கை

## மன்னார் மறை மாவட்ட ஆயர் ஜனாதிபதிக்கு கடிதம்

(மன்னார்)

மடு தேவாலயத்தினை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்தும் விடயம் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தின் தன்னிச்சையான நடவடிக்கைகளுக்கும், ஒரு தலைப்பட்சமான முடிவுகளுக்கும் அனைத்து மக்கள் சார்பாகவும் கண்டனத்தை தெரிவிப்பதோடு ஜனாதிபதி இந்த விடயத்தை உடனடியாக நிறுத்தி, இரண்டு பக்கமும் நேரடியான கலந்துரையாடலை மேற்கொண்டு சரியானதொரு முடிவை எமது மக்களுக்கும், எமது மறை மாவட்டத்திற்கும் வழங்க வேண்டும் என மன்னார் மறை மாவட்ட கத்தோலிக்க ஒன்றியம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக மன்னார் மறை மாவட்ட கத்தோலிக்க ஒன்றிய செயலாளர் ஜே.ஜே. கெனடி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

2020ஆம் ஆண்டிற்குள் மடுமாதா தேவாலயத்தின் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கோடு மடு தேவாலய பிரதேசத்தை புனித பூமியாக மாற்றுதல் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் கடிதத்தின் பிரகாரம் பாவனையில் உள்ள அனைத்து காணிகளையும் அபிவிருத்தி செய்வதற்காக உரிய அமைச்சின் ஊடாக இதற்கென ஒரு குழு நியமிக்கப்பட்டது.

இக் குழுவில் உள்ளடங்கியவர்களின் விபரம் தொடர்பாக ஜனாதிபதியினால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்திற்கு அமைய கலந்துரையாடியதன் பிரகாரம் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது.

இந் நிலையில் ஆயர் ஆண்டகையின் கடிதத்திற்கு எந்த விதமான பதிலும் ஜனாதிபதி செயலகத்தினால் இன்றுவரைக்கும் கிடைக்கப் பெறவில்லை.

தற்போது 302 ஏக்கர் காணியை மட்டும் புனித பூமியாக பிரகடனப்படுத்தி வெளியிடப்படவிருக்கும் வர்த்தமானி அறிவித்தலின் மாதிரி வரைபு ஒன்று மன்னார் மறைமாவட்ட ஆயர் ஆண்டகைக்கு அனுப்பப் பட்டுள்ளது.

இந்த மாதிரி வரைபின் படி தற்போது மடு தேவாலயத்திற்கு உரிய ஏறத்தாழ 5 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட காணியை புனித பூமி என்ற போர்வையில் 302 ஏக்கருக்குள் மட்டுப்படுத்தப்படும் ஒரு செயலாக கத்தோலிக்க ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

302 ஏக்கரில் 180 ஏக்கர் நிலம் மன்னார் ஆயருக்கு சொந்தமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



இதனை அடுத்து ஜனாதிபதிக்கு மடு தேவாலயத்தினை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்தும் விடயத்தினை ஒத்திவைக்குமாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் ஆண்டகை ஜனாதிபதிக்கு 09.12.2018 அன்று தொலைநகல் மூலம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

எனவே ஜனாதிபதி செயலகத்தின் தன்னிச்சையான நடவடிக்கைகளுக்கும், ஒரு தலைப்பட்சமான முடிவுகளுக்கும் அனைத்து மக்கள் சார்பாகவும் கண்டனத்தை தெரிவிப்பதோடு ஜனாதிபதி இந்த விடயத்தை உடனடியாக நிறுத்தி, இரண்டு பக்கமும் நேரடியான கலந்துரையாடலை மேற்கொண்டு சரியான தொரு முடிவை எமது மக்களுக்கும், எமது மறை மாவட்டத்திற்கும் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (2-285)



முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகர் பிரிவிற்குட்பட்ட கொட்டடி விநாயகர் ஆலயத்தில் பாதுகாப்பு படைகளின் முல்லைத்தீவு மாவட்ட பாதுகாப்பு படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் விசேட பொங்கல் விழா நடைபெற்றுள்ளது.

(படம்:-கண்டாவளை செய்தியாளர்)

## கிளிநொச்சி, முல்லை.மாவட்டங்களில்

# படையினர் வசமுள்ள காணிகள் விரைவில் ஒப்படைக்கப்படும்

(கண்டாவளை)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் படையினர் வசமுள்ள காணிகள் விரைவில் விடுவிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் படையினர் வசமுள்ள காணிகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில்படையினரின் கட்டுப்பாட்டில்உள்ள ஏறத்தாள 45 ஏக்கர்காணி மாவடட அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.




இக்காணிகளை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு எதிர்வரும் 19ஆம்திகதி கிளிநொச்சியில அமைந்துள்ள இராணுவ் ஒத்துழைப்ப மையததில நடைபெறவுள்ளது.

இதேபோல முல்லைத்தீவு மாவட்டத்தில் படையினர் வசமுள்ள காணிகளில் 42.5 ஏக்கர்காணி எதிர்வரும் 18ம்திகதி விடுவிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (2-315)

# கரைச்சி பிரதேச சபை பாதீடு மேலதிக நான்கு வாக்குகளால் நிறைவேற்றம்

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான பாதீடு மேலதிக நான்கு வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கரைச்சி பிரதேச சபையின் விசேட அமர்வில் 2019 ஆம் ஆண்டுக்கான பாதீடு நேற்றுக் காலை 9.30 மணிக்கு சமர்ப் பிக்கப்பட்டு அது தொடர்பான விவாதங்கள் 1.30 நிமிடங்கள் வரை இடம்பெற்றது.

பின்னர் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இதன் போது தவிசாளர் உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 17 உறுப்பினர்களும் ஐக்கிய தேசிய கட்சியின் ஒரு உறுப்பினருமாக 18 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

எதிராக சுயேட்சைக்குழு உறுப்பினர்கள் பதினொரு பேரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்த இரண்டு உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த ஒருவரும் என பதினான்கு பேரும் வாக்களித்தனர்.

இதனால் மேலதிக நான்கு வாக்குகளால் 2019 ஆம் ஆண்டுக்கான கரைச்சி பிரதேச சபையின் பாதீடு நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதேவேளை ஈ.பி.டி.பி. நடுநிலை வகித்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கலந்து கொண்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (2-312-315)

## கட்டுமானப்பணிகள் முடிவுறுத்தப்படாத

# வீடுகளை தொழில்நுட்ப உத்தியோகத்தர் பார்வையிட்டு அறிக்கையிடுகின்றார்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்களை கட்டிமுடிப்பதற்கான கொடுப்பனவுகள் உரிய முறையில் இதுவரை வழங்கப்படாமையால் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இந்த வீடுகளை பார்வையிட்டு அறிக்கையிடுவதாக தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் மாவட்ட அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மாங்குளம் பிரதேசத்தில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்களை முழுமைப்படுத்துவதற்கு நிதி கிடைக்கவில்லை என வீட்டுத் திட்டப்பயனாளிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு நிதி கிடைக்காமையினால் தற்போது அவை இடைநடுவில் விடப்பட்டிருப்பதாகவும் அவற்றைத் தொடர்ந்து கட்டிமுடிப்பதற்குரிய நிதிகளை வழங்குமாறும் பாதிக்கப்பட்ட பயனாளிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


இவ் விடயம் தொடர்பில், தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு வினவியபோது,

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் ஐந்து மாதிரிக்கிராமங்களில் 49 வீடுகளும் மாந்தை கிழக்கில் 11 கிராமங்களில் 175 வீடுகளும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் ஏழு கிராமங்களில் 97 வீடுகளும் வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் ஐந்து கிராமங்களில் 102 வீடு களும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் நான்கு கிராமங்களில் 66 வீடுகளும் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 11 கிராமங்களில் 218 வீடுகளுமாக 43 மாதிரிக்கிராமங்களில் இந்த வீட்டுத் திட்டங்கள் தலா ஒன்றும் ஐந்து இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதற்கான கொடுப்பனவுகள் கட்டம்கட்டமாக வழங்கப்பட்டு கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட போதும், குறிப்பிட்ட காலத்தின் இதற்கான பகுதிக்கொடுப்பனவுகளை வழங்ககுவதில் காலதாமதங்கள் ஏற்பட்டன.

கடந்த இரண்டு நாட்களாக குறித்த கிராமங்களில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இந்த வீடுகளை பார்வையிட்டு அறிக்கையிடுகின்றனர்.

தொடர்ந்து இதற்கான நிதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என மேற்படி அலுவலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)



வடக்கு மாகாணக் காணித் திணைக்களத்தின் ஊடாக மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்ல கிராஞ்சி தென்னந் தோட்டத்திற்கு வழங்கப்பட்ட சவுக்கு மரக்கன்றுகள் நாட்டும் நிகழ்வு அண்மையில் மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்ல கிராஞ்சி தென்னந் தோட்டத்தில் நடைபெற்றது. இதன் போது இல்லத் தலைவர். பொன். நித்தியானந்தம் ஐயா மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர் ஜெ. மினேஸ்.இல்லப் பணியாளர்கள் மற்றும் இல்லக் குழந்தைகள் ஆகியோரினால் சவுக்கு மரக்கன்றுகள் நாட்டப்படுவதைப் படங்களில் காணலாம்.

## மனிதப்புதைகுழி அகழ்வுப்பணி இடை நிறுத்தம்

# எலும்புக்கூடுகளின் மாதிரிகள் புளோரிடாவுக்கு

# காபன் பரிசோதனைக்காக அனுப்ப ஏற்பாடு

(மன்னார்)

**மன்னார் மனிதப் புதைகுழி அகழ்வுப்பணி நேற்று முன்தினமும் நேற்றும் நடைபெறவில்லை. அகழ்வுப் பணி இடைநிறுத்தப்பட்டு எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது. இதேவேளை எலும்புக்கூடுகளின் மாதிரிகள் காபன் பரிசோதனைக்காக புளோரிடாவுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**



மன்னார் மனிதப் புதைகுழி தொடர்பாக பலரும் தற்போது கவனம் செலுத்த தொடங்கியுள்ளனர். பல்வேறு நாடுகளின் இலங்கைக்கான தூதுவர் நேரடியாக மன்னார் மனிதப் புதைகுழிக்கு வருகை தந்து உண்மை நிலவரங்கள் தொடர்பான தகவல்களை சேகரிக்கின்றனர்.

இந்த நிலையில், மனிதப் புதை குழியின் அகழ்வுப் பணிகள் கடந்த இரு தினங்களாக இடம் பெறவில்லை என அறிய முடிகின்றது. கடந்த 12 ஆம் திகதி புதன்கிழமை 116 ஆவது நாளாக இடம் பெற்ற அகழ்வுப் பணிகளுக்கு பின்னர் அகழ்வுப் பணி நேற்று முன்தினமும் நேற்றும் இடம் பெறவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மனிதப் புதை குழி அகழ்வு பணிக்கு பொறுப்பான சட்டவைத்திய அதிகாரி கடமையின் நிமித்தம் கொழும்பு சென்றுள்ளமையாலேயே மேற்படி அகழ்வுப் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் மீண்டும் குறித்த அகழ்வுப்பணியானது எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தலைமையில் ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த புதை குழியில் இருந்து இதுவரை 21 சிறுவர்களின் எச்சங்கள் உட்பட மொத்தம் 276 முழு மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அவற்றில் 269 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டு நீதிமன்றத்தின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

மேலும் அகழ்வுப்பணிகளின் போது எடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் மாதிரிகள் "காபன்" பரிசோதனைக்காக புளோரிடாவுக்கு அனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் அளவில் காபன் பரிசோதனைக்காக அனுப்புவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-285)

## தொடர்புகள் துண்டிக்கப்படும் நிலையிலுள்ள வீதியை பார்வையிட்டார் சிறிதரன் எம்.பி



(பரந்தன்)

கிளிநொச்சி கரைச்சி ஊற்றுப்புலம் பழைய குடியிருப்புக்கான பிரதான வீதி துண்டிக்கப்படும் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது. இதனை கடந்த 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் நேரில் சென்று பார்வையிட்டார்.

.வீதியின் அபாய நிலை தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பேசியதுடன் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

பாராளுமன்ற உறுப்பினருடன் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன்,முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை ஆகியோரும் கலந்துரையாடியிருந்தனர்.

இந்தப் பிரதேசத்திற்கும் மாவட்டத்திற்குமான ஒரேயொரு பாதையாகக் காணப்படும் ஊற்றுப்புலம் பிரதான பாதையின் இரண்டு பாலத்திற்கு இடைப்பட்ட பகுதி நீரினால் அரிக்கப்பட்டு நீரில் மூழ்கும் ஆபத்தில் காணப்படுகின்றது.

குறித்த பாதை துண்டிக்கப்படும் பட்சத்தில் ஊற்றுப்புலம் கிராமத்தின் பழைய குடியிருப்பில் வாழும் நூற்றுக்கணக்கான மக்கள் மாவட்டத்துடனான தொடர்புகள் துண்டிக்கப்படும் ஆபத்து ஏற்படும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

எனவே உடனடியாக உரிய தரப்பினர் விரைந்து நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும் பொது மக்கள் அவசர வேண்டுகோள் விடுத்த நிலையிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (2-312)




### 'என்னையும் எடுத்துச் செல்லுங்கள்'

# கிளிநொச்சியில் குப்பைகளுக்குள் எழுதப்பட்டு பதாகை வைப்பு



(பரந்தன்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையிடம் குப்பைகள் கோரிக்கை விடுவது போன்று பதாகை ஒன்று குப்பைகளுக்குள் வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ஏ-9 பிரதான வீதியில் மின்சார சபைக்கு முன்பாக காணப்பட்ட குப்பைகளுக்கு நடுவில் கரைச்சி பிரதேச சபையினரே என்னை கடந்து செல்லும் நீங்கள் என்னையும் எடுத்துச் செல்லுங்கள் என எழுதப்பட்ட பதாகை ஒன்று நேற்று முன்தினம் பிற்பகல் வைக்கப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச சபையின் கழிவகற்றல் செயற்பாடுகள் தொடர்பில் அண்மைக் காலமாக பலராலும் விமர்சிக்கப்பட்டு வந்துள்ளன.

குறிப்பாக நகரில் கூட கழிவுகளை சீராக அகற்றவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில்இந்த பதாகை வைக்கப்பட்டுள்ளது.(2-312)

# வலப்புறம் பசு மாட்டை வெட்டி இறைச்சியாக்கிய இருவர் கைது



(கண்டாவளை)

கிளிநொச்சியில் வலப்புறம் பசு மாட்டினை வெட்டி இறைச்சியாக்கிய இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருநகர் பகுதியில் குறித்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. வலப்புறம் பசு மாடு ஒன்றினை திருட்டுத்தனமாக வீடொன்றில் வைத்து இறைச்சியாக்கிய போது பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து குறித்த பகுதிக்கு விரைந்த பொலிஸார் தேடுதல் மேற்கொண்டனர்.

இதன்போது குறித்த மாட்டிலிருந்து பெறப்பட்ட இறைச்சியும், எச்சங்களும் மீட்கப்பட்டதுடன், சம்பவத்துடன் தொடர்புடையவர் என சந்தேகப்படும் இருவர் கைது செய்யப்பட்டதாகவும், பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு பொது மக்களின் மாடுகள் கடத்தப்படுவதும், சட்ட விரோதமான முறையில் இறைச்சிகளாக்கப்படுவதும் கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (2-315)

# தென்னை பயிர்ச்செய்கை சபையால் பயனாளிகளுக்கு பசளை,காசோலை வழங்கி வைப்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் தென்னை பயிர்ச்செய்கை சபையினால் வழங்கப்பட்ட மானியத் திட்டங்களுக்கான பயனாளிகளுக்குரிய காசோலை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் காலை பத்து மணிக்கு தென்னை பயிர்ச்செய்கை சபையின் வடபிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.



குறித்த மானியத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள 320 பயனாளிகளில் 51 பேருக்கான காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டதோடு 120 பேருக்கு ஊடுபயிர் மேற்கொள்வதற்கான விதைகள், பசளைகள் என்பனவும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கோ.தனபாலசுந்தரம்,கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள பிரதி பணிப்பாளர் வைத்தியர் எஸ்.கௌரிதிலகன்,மாவட்ட விவசாய பணிப்பாளர் ரா.கோகுலதாசன்,தென்னை பயிர்ச்செய்கை சபையின் பண்ணை திட்டமிடல் உத்தியோகத்தர் ஈ.சற்குணன் உள்ளிட்டவர்கள் விருந்தினர்களாகக் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு காசோலைகள்,உரமானியம் ஆகியவற்றை வழங்கி வைத்தனர். (2-281)

# பகிரங்க ஏல விற்பனை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடைமையாக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் எதிர்வரும்19 ஆம்திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளதாக நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார்.(2-281)

# தீர்ப்பினூடாக ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டுள்ளது

## விஜயகலா எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)



சிறுபான்மை மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொண்டு பெரும்பான்மை மக்களுடன் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும் என்ற காரணத்திற்காகவே நல்லாட்சி அரசாங்கத்தை தோற்றுவித்தோம்.

கடந்த காலத்தில் இடம் பெற்ற சில நிகழ்வுகள் பல மாற்றத்தை ஏற்படுத்தின எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. விஜயகலா மகேஸ்வரன் இந்தத்தீர்ப்பினூடாக ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதியால் பாராளுமன்றக் கலைப்பு தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு தவறானது என நேற்று முன்தினம் உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# நாட்டில் எந்தவொரு பிரஜையும் அரசியலமைப்பை மீற முடியாது

## நீதிமன்றத் தீர்ப்பு குறித்து றிசாத்

(கொழும்பு)



நாட்டில் எந்தவொரு பிரஜையும் அரசியலமைப்பை மீற முடியாது என்பதை வரலாற்று முக்கியத்துவமிக்க உயர் நீதிமன்ற தீர்ப்பு நிரூபித்துள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்புக்கு முரணான வகையில் ஜனாதிபதி செயற்படத் தொடங்கியதிலிருந்து, அது பிழையென நிரூபிக்கும் வகையில், நீதிமன்றத்தின் ஊடாக மேற்கொண்ட முயற்சிகளுக்கு உரிய பலன் கிடைத்துள்ளது. சட்டம் தனது கடமையை மிகச் சரியாக செய்துள்ளதாகவும் றிசாத் தெரிவித்தார்.

கடந்த நவம்பர் 12 ஆம் திகதி நீதிமன்றம் நாடாளுமன்றம் கலைப்புக்கு எதிராக வழங்கிய இடைக்கால தடையுத்தரவு மூலம் ஜனநாயகத்தை விரும்பும் மக்களுக்கு ஓரளவு நிவாரணமும் நிம்மதியும் கிடைத்தது.

அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் சரித்திரம் வாய்ந்த தீர்ப்பானது ஜனநாயகத்திற்கான பூரண வெற்றியெனவே நாம் கருதுகின்றோம். நீதிமன்றத்தில் ஏனைய கட்சிகளுடன் இணைந்து அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் ஜனநாயக வெற்றிக்காகவும் நீதிக்காவும் போராடியது. அந்தவகையில் அரசியலமைப்புச் சட்டமானது நீதிமன்றத்தால் பாதுகாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சிறுபான்மை மக்களுக்கும் பாதுகாப்பு கிடைத்துள்ளதாகவே நாம் உறுதியாக நம்புகின்றோம்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைக்கு மதிப்பளித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இனியும் காலம்தாழ்த்தாது ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிரதமர் பதவியை வழங்கி, ஒக்டோபர் 26 ஆம் திகதிக்கு முன்னரான நிலையை உருவாக்கி தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு உடனடியாக தீர்வைக் காண வேண்டும்.

ஜனநாயகத்தை வெற்றி கொள்வதற்கான இந்தப் போராட்டத்திற்கு ஒத்துழைத்தவர்களுக்கும் எமது வேண்டுகோளை ஏற்று இறை பிரார்த்தனையில் ஈடுபட்டவர்களுக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவிக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கதிரையிலிருந்து தவறி வீழ்ந்த பிரிட்டன் பிரஜை பரிதாபமாக பலி

(கொழும்பு)

இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்ட பிரித்தானியப் பிரஜையொருவர் கதிரையிலிருந்து தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளதாக வெலிகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

70 வயதுடைய பிளாக் ஸ்டீவ் றொபட்பட்ரிக் என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

வெலிகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனியார் ஹோட்டலொன்றில் அமர்ந்திருந்த வேளையிலேயே குறித்த நபர் கதிரையிலிருந்து தவறி கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக மாத்தறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் பிரித்தானிய தூதரகத்தினூடாக குறித்த நபரது குடும்பத்தாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. (இ-7)

# மதுபோதையில் வாகனம் செலுத்தியவர் மறியலில்

(கரணவாய்)

மது போதையில் வாகனம் செலுத்திய நபர் ஒருவரை எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை பதில் நீதிபதி குமாரசுவாமி உத்தரவிட்டார்.

நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட கரணவாய்ப் பகுதியைச் சேர்ந்த நபரை நேற்று முன்தினம் வியாழக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்திய போது முன் குற்றம் இருப்பது தொடர்பில் பொலிஸார் நீதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்ததையடுத்து விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிபதி குமாரசுவாமி உத்தரவிட்டார். (இ-60)





யாழ்.புலோலி தென்மேற்கு கந்தமுருகேசனார் மாதிரி முன்பள்ளியின் ஒளிவிழா மு.ஜெகதேவன் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக அருட்தந்தை ஏ.பி. அன்ரனிப்பிள்ளை கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். (படங்கள்:- மகாலிங்கம்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 100 | 110 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 500 | 400 | 360 | 400 |
| தக்காளி | 300 | 320 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 40 | 40 |
| கோவா | 120 | 120 | 80 | 120 |
| கரட் | 200 | 200 | 250 | 240 |
| பூசணி | 80 | 50 | 40 | 80 |
| புடோல் | 120 | 80 | 90 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 150 | 150 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 | 100 |
| பாகற்காய் | 300 | 300 | 250 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 200 | 200 | 240 | 200 |
| லீக்ஸ் | 200 | 200 | 150 | 240 |
| பீற்றூட் | 200 | 160 | — | 200 |
| கறிமிளகாய் | 350 | 280 | 250 | 300 |
| முருங்கைக்காய் | — | — | — | — |
| போஞ்சி | 150 | 160 | 110 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | — | 80 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 60 | 40 | 60 |
| தேசிக்காய் | 500 | 300 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 40 | 30-50 |
| இராசவள்ளி | 250 | 160 | 170 | 200 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | 120 | 30 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 15 | 30 |
| ஈரப்பலா | 50 | 60 | 120 | 60 |

# நீதிபதிக்கு கௌரவிப்பு விழா




(கரணவாய்)

பருத்தித்துறை மாவட்ட நீதிபதியாக கடமையாற்றி இடமாற்றலாகி செல்லும் நீதிபதி பெருமாள் சிவகுமாருக்கான கௌரவிப்பு விழா கடந்த திங்கட்கிழமை நீதிமன்றக் கட்டடத்தில் இடம் பெற்றது.

பருத்தித்துறை நீதிமன்றத்தில் மூன்று வருடங்களைப் பூர்த்தி செய்து இடமாற்றலாகி செல்வதை முன்னிட்டு நீதிபதிக்கு இக் கௌரவிப்பு விழா இடம் பெற்றது.

பருத்திதுறை சட்டத்தரணிகள் சங்கத்தால் இந்தக் கௌரவிப்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-60)

# ஊர்காவற்றுறையில் 50 பேருக்கு டெங்கு

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒன்றரை மாதகாலப்பகுதியில் ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் 50 பேர் டெங்கு நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகியதாக இனங்காணப்பட்டுள்ளனர்.

கடந்த நவம்பர் மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் இதுவரையான காலப்பகுதியில் 50 பேர் டெங்கு நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகியதாகவும் மேலும் இத் தொகை அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஊர்காவற்றுறைப் பிரதேசத்துக்குட்பட்ட நாரந்தனை,மெலிஞ்சிமுனை ஆகிய பகுதிகளே அதிகமான டெங்கு நோயாளர்களைக் கொண்ட பகுதியாக விளங்குகின்றது.

இப் பிரதேசத்தில் டெங்கு நோய் பரவுவதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் டெங்கு புகையூட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் நுளம்புகள் பரவுவதற்குரிய சாதகமான சூழலை வைத்திருக்கும் வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கும் தாக்கல் செய்யப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 16.12.2018-14.01.2019








## இடம், பூமி வாங்கும் யோகம்!

மிதுன இராசி வாசகர்களே, விளம்பி வருடம் மார்கழி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் புதன், ஜீவன ஸ்தானத்தில் குருவோடு இணைந்து சஞ்சரிக்கின்றார். 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு பகவான், இராசிநாதனோடு இணையும் பொழுது தொழில், உத்தியோகத்தில் மிகப்பெரிய மாற்றங்களையும், ஏற்றங்களையும் வழங்கும். குறிப்பாக உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு ஊதிய உயர்வும், மேலதிகாரிகளின் ஆதரவும் கூடுதலாகக் கிடைக்கும். சம்பளப்பாக்கிகள் தானாக வந்து சேரும். சக பணியாளர்களை வெளிநாட்டிற்கு அனுப்பி வைக்கிறார்களே, நமக்கு மட்டும் வெளிநாடு செல்லும் வாய்ப்புக் கொடுக்கவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு இப்பொழுது தானாகவே தடைகள் அகலப்போகின்றது. பிரச்சினைகள் அகன்று விடிவுகாலம் ஏற்படப்போகின்றது.

தொழில் நடத்துபவர்கள் இதுவரை எண்ணற்ற தொல்லைகளைச் சந்தித்திருக்கலாம். பங்குதாரர்கள் பக்கபலமாக இல்லாமல் விலகிச் செல்வதாக சொல்லி இருக்கலாம். அல்லது நீங்களே விலகுவதாக முடிவெடுத்திருப்பீர்கள். உங்கள் முடிவு வெற்றிகரமாக அமையப் போகின்றது. தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்து சேர்ந்து பொருளாதார நிலையை உயர்த்திக்கொடுப்பர். 7ஆம் இடத்தில் சனி இருக்கும் பொழுது இவ்வளவு நற்பலன்கள் நடைபெறுகின்றதே என்று ஆச்சரியப்படுவீர்கள்.

ராகு 2இல் இருப்பதால் பொருளாதாரப் பற்றாக்குறை ஏற்படாது. புதியபாதை புலப்படும். சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தைப் பெறுவீர்கள். வீண் பழிகளிலிருந்து விலக நேரிடும். வீடு, இடம் வாங்கும் யோகம் ஒருசிலருக்கு ஏற்படலாம். என்றைக்கோ வாங்கிப் போட்ட சொத்துக்களை இப்பொழுது விற்பதன் மூலம் பல மடங்கு இலாபம் கிடைத்து மகிழ்வீர்கள். அது மட்டுமல்லாமல் வந்த இலாபத்தை தொழிலுக்கு மூலதனமாக்கிக் கொள்ளவும் முன்வருவீர்கள். செவ்வாய் 9இல் சஞ்சரிப்பது ஒருவழிக்கு நன்மை தான். பெற்றோர் வழியில் கிடைக்க வேண்டிய பாசமும், பணமும் கிடைக்கும். உடன் பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். கடன் சுமையைப்பற்றிக் கவலைப்படாத நீங்கள் வாங்கிய கடனை எல்லாம் கொடுத்து நிம்மதியாக வாழ வேண்டுமென்ற எண்ணத்தை உருவாக்கிக் கொள்வீர்கள். இம்மாதம் அதிகாலையில் எழுந்து திருப்பாவை, திருவெம்பாவை பாடி தெய்வங்களைத் தரிசிக்க வைக்கும் மாதம் என்பதால், மாதம்முழுவதும்அதிகாலை நேர வழிபாடு அனுகூலம் தரும். வாய்ப்பிருக்கும் பொழுது காலையில் சிவபுராணம் பாடி நடராஜப் பெருமானையும், விஷ்ணு துதிபாடி பெருமாளையும் வழிபடுவது நல்லது.

### மீனச் செவ்வாயின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் டிசெம்பர் 17ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் பொழுது முத்தான தொழில்கள் வாய்க்க வாய்ப்புகளும், வசதிகளும் கைகூடிவரும். தொழில் போட்டிகள் அகலும். எதிரிகளின் தொல்லையில் சிக்கித் தவித்து வந்த நீங்கள் இப்பொழுது இடமாற்றம் செய்து தனித்து இயங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். நீண்ட நாள் முயற்சிகள் கைகூடும். வழக்குகள் சாதகமாக முடியலாம். வெளிநாட்டில் தொழில் புரிய முயற்சி செய்தவர்களுக்கு அது கைகூடும். மறைமுக எதிர்ப்புகளை முறியடிக்க நண்பர்கள் கைகொடுத்து உதவுவர். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும் நேரமிது.

### தனுசு இராசியில் புதனின் சஞ்சாரம்

உங்கள் இராசிநாதனாகவும், 4ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் புதன், இதுவரை ரோக ஸ்தானம் எனப்படும் 6ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்தார். டிசெம்பர் 29 ஆம் திகதி சப்தம ஸ்தானத்திற்குச் சென்று தன் வீட்டைத் தானே பார்க்கின்றார். இக்காலம் ஒரு பொற்காலமாக உங்களுக்கு அமையும். சுகாதிபதி புதன் உங்கள் இராசியைப் பார்க்கும் பொழுது சுகங்களும், சந்தோஷங்களும் சேரும். வாகன யோகம் உண்டு. பயணங்களால் பலன் கிடைக்கும். தாய்வழி ஆதரவோடு தக்க விதத்தில் முன்னேற்றம் காண்பீர்கள். மாமன், மைத்துனர் வழி ஒத்துழைப்புகள் சிறப்பாக அமையும். அவர்களோடு ஏற்பட்ட மன ஸ்தாபங்கள் மாறும். சூரியனோடு புதன் இணைந்து புத-ஆதித்ய யோகத்தை உருவாக்குவதால் உங்களுக்கோ அல்லது பிள்ளைச் செல்வங்களுக்கோ கல்வியில் ஏற்பட்ட தடை அகலும்.

### விருச்சிக சுக்கிரனின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் ஜனவரி முதல் திகதி விருச்சிக இராசிக்குச் செல்கின்றார். 12இற்கு அதிபதி 6ஆம் இடத்தில் சஞ்சரித்து 12ஆம் இடத்தையே பார்ப்பதால் மிகுந்த யோகம் தரும் நேரமாகும். தங்கம், வெள்ளி வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களும், ஆடம்பரப்பொருட்களையும் வாங்கும் யோகம் உண்டு. நீண்டதூரப் பயணங்களால் நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகலாம். உடல் நலம் சீராகி உற்சாகப்படுத்தும். கொடுக்கல்-வாங்கல்கள் திருப்தி அளிக்கும். இம்மாதம் சர்ப்ப கிரகங்களின் ஆதிக்கம் இருப்பதால் ராகு-கேதுக்களின் வழிபாடும், யோக பலம் பெற்ற நாளில் சர்ப்ப சாந்தியும் செய்வது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் பணத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும் விதத்தில் கிரகங்கள் சாதகமாக இருக்கின்றன. ஆனால் ஒரே ஒரு கிரகமான சனி கிரகம் மட்டும் சப்தம ஸ்தானத்தில் இருப்பதால் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கலாம். எனவே உடல் நலத்தில் ஏதேனும் சிறு தொல்லைகள் வந்தாலும் உடனுக்குடன் மருத்துவ ஆலோசனையைப் பெறுவது நல்லது. கணவன்-மனைவிக்குள் பிணக்குகள் அகன்று இணக்கம் ஏற்பட விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். பிள்ளைகளால் பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்கவும், பெரும் விரயங்களிலிருந்து தப்பிக்கவும் அவர்களை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வதோடு கொஞ்சம் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது. சுபவிரயங்கள் அதிகரிக்கும். பணிபுரியும் பெண்களுக்கு சம்பள உயர்வு பற்றிய சந்தோஷத் தகவல் வந்து சேரும். சனி பகவானும் சூரிய பகவானும் அடுத்தடுத்து இருந்து அருள் வழங்கும் ஸ்தலங்களுக்குச் சென்றுவழிபட்டு வருவது நல்லது.









## எதிரிகள் விலகுவர்!

கடக இராசி வாசகர்களே, விளம்பி வருடம் மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சந்திரன் குரு வீட்டில் சஞ்சரித்துக் குருவால் பார்க்கப்படுகின்றார். எனவே குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். மங்கல நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். ஏக்கங்கள் தீர்ந்து இனிய பலன் கிடைக்கும் நேரமிது என்று கூட சொல்லலாம். தாக்குதல்களிலிருந்து விடுபடுவீர்கள். தடைகள் அகலும். பார்க்கும் செயல்களில் வெற்றி கிடைக்கும். பாசாங்கு செய்தவர்களை இனம் கண்டு கொள்வீர்கள். குருவின் பார்வை உங்கள் இராசியின் மீது பதிவது மிகுந்த யோகமாகும். சுபகிரகத்தின் பார்வை பதிவதால் துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். பணிபுரியும் இடத்தில் உள்ள பிரச்சினை அகலும்.

குழந்தைகளின் எதிர்கால நலன்கருதி நீங்கள் எடுத்த முயற்சிக்கு உறவினர்களும், நண்பர்களும் போட்டி போட்டுக்கொண்டு உதவுவர். உங்களை உதாசீனப்படுத்தியவர்கள் ஓடிவந்து ஒட்டிக்கொள்வர். கடைதிறப்பு விழா, கட்டடத் திறப்புவிழா போன்றவற்றில் ஆர்வம் காட்டுவீர்கள். எந்தக் காரியத்தையும், எடுத்தோம் முடித்தோம் என்று செய்ய இயலும். உங்களை விட்டு விலகிச்சென்ற சொந்தங்கள் மீண்டும் வந்து இணைய முயற்சிப்பார்கள். பொது நலம் மற்றும் அரசியலில் உள்ளவர்களுக்கு பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கும்.

6ஆம் இடத்தில் சனி சூரியனோடு இணைந்து சஞ்சரிக்கின்றார். உங்கள் இராசிக்கு 7, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அஷ்டமாதிபதியாக விளங்கும் சனி பகவான் 6இல் சஞ்சரிக்கும் பொழுது விபரீத ராஜயோக அடிப்படையில் நல்ல முன்னேற்றத்தை உருவாக்குவார். இதுவரை செய்த முயற்சிகளில் இருந்த தடை அகலும். உடல் ஆரோக்கியம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.

ஜென்மத்தில் ராகுவும், 7இல் கேதுவும் இருப்பதால் சர்ப்ப தோஷத்தின் அடிப்படையில் உள்ள காலமாகும். எனவே, ராகு-கேதுக்களின் ஆதிக்கம் உள்ள திசாபுத்தி நடப்பவர்கள் கொஞ்சம் நிதானத்தோடு செயற்படுவது நல்லது. அதுமட்டுமல்லாமல் செவ்வாய்க்கிழமை தோறும் துர்க்கை வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். மேற்குப் பார்த்த துர்க்கை இருக்கும் ஆலயங்களுக்குச் சென்று அபிஷேகம் மற்றும் சிறப்பு வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள். யோகபலம் பெற்ற நாளில் நாகசாந்திப் பரிகாரங்களையும் செய்து கொள்வது நல்லது. அப்பொழுதுதான் ஏற்ற இறக்கமில்லாத வாழ்க்கை அமையும்.

### மீன செவ்வாயின் சஞ்சாரம்

டிசெம்பர் 17ஆம் திகதி மீனத்திற்கு செவ்வாய் செல்கின்றார். இதன் விளைவாக சொத்துக்களால் ஆதாயமும், சொந்தங்களால் நன்மையும் கிடைக்கப் போகின்றது. குறிப்பாக மருத்துவச் செலவுகள் குறையும். மக்கள் செல்வங்களால் மகிழ்ச்சி அதிகரிக்கும். சிக்கல்களில் இருந்தும், சிரமங்களிலிருந்தும், விடுபடுவீர்கள். தெய்வீகச் சுற்றுலாக்களை மேற்கொள்ளும்யோகம்உண்டு. உடன் பிறப்புகளில் உங்களை விட்டு விலகியிருந்த ஒரு சிலர் இப்பொழுது வந்திணைய பிரியப்படுவர். பத்திரப் பதிவில் இருந்த தாமதங்கள் அகலும். கட்டட நிர்மாணச் செலவுகள் அதிகரித்தாலும் புதிய கட்டடங்களைக் கட்டும் எண்ணம் நிறைவேறும். பிற இனத்தாரால் பெருமையும் சேரும்.

### தனுசு புதனின் சஞ்சாரம்

புதன் உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். சகாய ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானத்திற்கு அதிபதியான புதன், டிசெம்பர் 29ஆம் திகதி 6ஆம் இடத்திற்கு வரும்பொழுது சில நல்ல பலன்களை அள்ளி வழங்குவார். திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும். ஒருசிலருக்கு திடீரென்று உத்தியோக வாய்ப்பு கிடைக்கலாம். இதுவரை எந்த வேலையிலும் நிரந்தரமாக இருக்க முடியவில்லையே என்று கவலைப்பட்டவர்கள் இப்பொழுது செய்யும் முயற்சி கைகூடும். அரசு வேலைக்கு முயற்சி செய்தால் கூட அது நிறைவேறுவதற்குரிய அறிகுறிகள் தென்படும். சொத்துப் பிரச்சினை சுமுகமாக முடியும்.

### விருச்சிக சுக்கிரனின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 4,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். இவர் ஜனவரி முதலாம் திகதி 5ஆம் இடத்திற்கு வருகிறார். பொதுவாக சுக ஸ்தானம் மற்றும் இலாப ஸ்தானத்திற்கு அதிபதியான கிரகம் 5ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். அவர்களின் கல்யாண வாய்ப்புகள் அல்லது கடல் தாண்டிச் சென்று படிக்க வேண்டுமென்று விரும்பியவர்களுக்கு வாய்ப்புகள் இப்பொழுது கைகூடும். வெளிநாட்டில் தொழில் தொடங்க வேண்டுமென்று முயற்சித்தவர்களுக்கு இப்பொழுது ஆதரவு கிடைக்கும். புண்ணிய காரியங்களுக்கு கொடுத்து உதவி செய்வீர்கள். பெண் வழிப் பிரச்சினைகள் அகலும். பிறர்போற்றும் அளவிற்கு வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கொள்வீர்கள். இம்மாதம் செவ்வாய்க்கிழமை தோறும் விஷ்ணு, துர்க்கையை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் புதிய திருப்பங்கள் பலவற்றையும் சந்திக்கும் மாதமாகும். சுற்றத்தாராலும், சொந்தங்களாலும் வந்த குழப்பங்கள் மாறும். பொருளாதார நிலை உயரும். கணவன்-மனைவிக்குள் கனிவும், பாசமும் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் அதிலிருந்து விலகி சுயதொழில் செய்யும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர். தாய் மற்றும் சகோதர வர்க்கத்தினரின் ஒத்துழைப்பில் இருந்த தடை அகலும். பிள்ளைகளால் பெருமை உண்டு. பணிபுரியும் இடத்தில் பாராட்டு கிடைக்கும். மேலதிகாரிகளின் ஆதரவோடு சலுகைகளை எளிதில் பெறுவீர்கள். மொத்தத்தில் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும் மாதமிது. வியாழன் தோறும் விரதமிருந்து குரு பகவானை வழிபடுவதோடு, ஆருத்ரா தரிசனத்தன்று நடராஜப் பெருமானையும் வழிபட்டால் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும்.

(தொடரும்...)

# ALUMNI ASS

## JAFFNA ADVANCED TECH

# பாராட்டி வாழ்த்

Congrats!



| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வில்வமூர்த்தி சாயிராம் | செல்வகுமாரன் கீர்த்தனா | வேணுயா சண்முகநாதன் | ராதாகிருஷ்ணன் நிரோஜன் | டுசாளினி உதயராஜா | தமேன் அன்ரனி முகமட்டு ஸ்பாக் | சஜிகீர்த்தனா இராஜேந்திரன் | துஷாரா பாலசிறிதரன் | ஜனனிநிவேதா சண்முகவேல் | விலாசினி நம்பியாரூரன் | அனி முத்து |



| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அஜிலா பாஸ்கரசிங்கம் | சியாமினி மரியநாயகம் | ஜோதிமார்க்கண்டு திவ்ஜன் | வம்சலீன் ஆன்கௌசியா | சுகந்தி லோகநாதன் | யோகதாசன் டர்சன் | சண்முகராசா சுதர்சன் | சூரியகுமார் ஸ்ரீபிரசாந்தன் | உதயகுமாரன் சஜீவன் | ஜெகநாதன் ஜெகஜூஸாந்தினி | பிரசா நிறோ |



| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நவரத்தினம் துவாரகன் | இராசகிளி சுசீந்திரன் | கீர்த்தனா சூரியகுமாரன் | அபிரா ஜெகசீலன் | நிஷானிக்கா சர்வேஸ்வரன் | திவ்யரூபி சிதம்பரநாதன் | மந்தாகினி காராளசிங்கம் | உமையாள் இராஜகுலசிங்கம் | அபிலாசினி இராசதுரை | நடராசா யனுசியா | தீபிக குமாரச |



| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜான்சி இராசநாதன் | கந்தையா கஜீபன் | சகிலா இராஜேந்திரன் | தர்மிலா துஷ்யேந்திரன் | நியாஸ் முகமட் ஆயிஸா ஸஹ்ரானி | ஜீவிதா இரத்தினசபாபதி | சுபிதா பிறைசூடி | வாஹினி தர்மராஜா | அம்பிகா சிவதீபன் | ஜெயசேகரன் தேவிகா | மதுரா மயில்வாக |



HNDE

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| விஜயநிறோஜினி அருள்தாஸ் | நிவேதிகா ஸ்ரீதுமார் | நியூட்டன் அஞ்சலிற்றா றொப்றிக்கோ | ஏஞ்சல் மயூறிக்கா மரியதாஸ் | தர்சிகா சங்கரதாஸ் | ஷியாமா யுகதீஸ்வரா | | துரைசிங்கம் ஸஜேத் | மிதுனா செல்வராஜா | சோபிகா சிவபாலன் | மரியதாஸ் தனிசியஸ் |



| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காயத்திரி பிறேமராஜன் | சாந்தகுமார் கிஷாந் | கேமா சற்குணநாதன் | தனுசியா நேசராஜன் | மீரா யோகீஸ்வரன் | கண்ணன் மதுஷாந்த் | தேவராஜா றொசான் | மகேந்திரன் கீதன் | சச்சிதானந்தன் ஜீவானி | கஜீபன் இனோஜா | சஞ்சி கிங்ஸ் |

**15.12.2018 மற்றும் 16.12.2018 ஆம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இலங்கை உயர் தொழில் நுட்பவியல் நிறுவன 15 ஆவது பட்டமளிப்பு வைபவத்தில் HNDA, HNDM, HNDE, HNDIT, HNDTHM, HND.ENG. பட்டம் பெறும் யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களையும் பட்டம் பெறும் ஏனைய மாணவர்களையும் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்படைய வாழ்த்துகின்றோம்.**



| | | | |
|---|---|---|---|
| கபில்ஜா கமலசேகரம் | தனோஜினி ஹரீந்திரன் | ரேணுகா குலேந்திரநாயகம் | சின்னத்துரை தனுஜஸன் |

# SSOCIATION

## ECHNOLOGICAL INSTITUTE

SLIATE

# ..த்துகின்றோம்






சினி ..ருரன் | அனித்தா முத்துவேல் | உதயசேகரன் அனுராஜ் | சிறிதனுசினி சிறிஸ்காந்தா | சுகந்தினி சூரியகுமாரன் | சுதாசினி பேரின்பநாதன் | பரசுராமன் இலங்கேசன் | மனோகரன் சஞ்சிற் | உதயகுமார் கெஸ்கேசன் | கஜானா சதானந்தசிவம் | அன்பழகன் டனுஷாந்

HNDA



..தன் ..ந்தினி | பிரசாந் நிறோஜினி | கஜேந்திரன் சிந்தூரன் | வைஷ்ணவி மகாலிங்கம் | ரவீந்திரன் சோபினி | தருமலிங்கம் கஸ்தூரி | பிரமுதி மலிந்த குமாரி தசநாயக்க | பாலேந்திரா துவாரகா | மொறின் டினுஜா றெஜினோல்ட் | சிவராசா கீர்த்திகா



தீபிகா குமாரசாமி | தில்லையம்பலம் ஜேப்பிரியா | சாள்ஸ் விஜயரட்ணம் ஸ்ராலின் கமிலஸ் | தர்சிகா சத்தியமூர்த்தி | நடராசா அம்பிகா | திவானுகா கனேஸ்வரன் | கந்தசாமி கார்த்திகேயன் | கருணாநந்தசிவம் மதுராந்தகன் | அலன் டியந்தா சாம்சன் லூர்த்திஸ் | குகானந்தன் தவனேஸ்வரி



மதுரா மயில்வாகனம் | சாள்ஸ் விஜயரெட்ணம் ஜோன் கலிஸ்ரஸ் | ஹம்சவாஹினி தியாகராசா | ஆரணி பாலேந்திரம் | திருநானந்தம் ஜெயரூபன் | ஸர்மலா யோசப் | தெரசிற்றா திலானி மாட்டீன் நெல்சன் | மேரி ஜீவனா சீவரட்ணம் | முருகதாசன் பிரதீபா | அருள்தாஸ் கசின்



மரியதாஸ் குரூஸ் தனிசியஸ் குரூஸ் | குகராஜா பிறைன் அடம் | நிர்மலி சுஜானி மரியதாஸ் | கனிஸ்ரா ராஜா | இசைவாணி கண்மணி | சஞ்சிதா சதானந்தராசா | முத்துக்குமாரசாமி கஜவதனா | சிவகணேசக்குருக்கள் சியாமளஜெனனி | அறிவொளி ராசநாதன் | மகாதேவா துஷ்யா

HND IT



சஞ்சிகா கிங்ஸ்லி | தயாபரன் தர்ஷா | தீபிகா சிவலிங்கம் | நிலோஜினி வசந்தகுமார் | தவப்பிரமமூர்த்தி தனஞ்சயன் | தர்மலிங்கம் கவிராஜ் | வினோஜா சிலம்புநாதன் | சுஜித்தா இராசலிங்கம் | வேல்முருகு கௌதமி

HNDM

HNDTHM



..னத்துரை ..னுஸன் | டயானா ஜெயராசா | நிரோஜா அருமைத்துரை | அமிர்தநாயகம் விதுஷா | சரண்யா சின்னராசா | தர்ஷிகா நவரத்தினம்

**ALUMNI ASSOCIATION JAFFNA ADVANCED TECHNOLOGICAL INSTITUTE,**
**No.665/2, BEACH ROAD, JAFFNA**
**Web site:-**
**www.jafatialumni.lk**

# நீதித்துறை சுயாதீனமாக இயங்குவதை உயர் நீதிமன்றத் தீர்ப்பு நிரூபித்துள்ளது

## சரத் பொன்சேகா வரவேற்பு

(கொழும்பு)

**இலங்கையின் நீதித்துறை சுயாதீனமாக இயங்குவதை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு நிரூபித்துள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். அத்தோடு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை இனியாவது அரசியலமைப்பிற்கு முரணான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.**



ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தை கலைத்தமை தொடர்பிலான உயர் நீதிமன்ற தீர்ப்பைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், "ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சில அரசியலமைப்புக்கு முரணான முடிவுகளை நிறைவேற்ற முயற்சித்தார். ஆனால் உயர் நீதிமன்றம் அது அரசியலமைப்புக்கு உட்பட்டது இல்லை எனத் தீர்ப்பளித்துள்ளது.

மேலும் நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசிய முன்னணி அதன் பெரும்பான்மையை நிரூபித்துள்ளது. அத்தோடு பிரதமரும் நம்பிக்கை வாக்கெடுப்பில் நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிரூபித்துள்ளார்.

இந்நிலையில் அரசியலமைப்பை மீறிச் செயற்படுத்திய விடயங்களால் ஏற்படுத்தப்பட்ட விளைவுகளை ஜனாதிபதி எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்" எனவும் சரத் பொன்சேகா தெரிவித்தார். (இ-7)

# உயர் நீதிமன்றத்தின் ஆலோசனையுடன் தேர்தல்

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு



(அம்பாந்தோட்டை)

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை அமைச்சரவை மற்றும்நாடாளுமன்றம் ஆகியவற்றின் ஊடாக மேற்கொள்ளவில்லை என்றால் உயர் நீதிமன்றத்தின் ஆலோசனையை பெறவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் நாட்டில் எதிர் வரும்இரு ஆண்டுகளில்மூன்று வகையான தேர்தலை நடத்த வேண்டிய தேவை உள்ளதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தவகையில், அமைச்சரவையொன்று நாட்டில் இருந்தாலும் இல்லாவிடினும் தேர்தலை நடத்துவதற்கு எந்தவொரு தடையும் இல்லை எனவும் மகிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# சம உரிமை கோருபவர்கள் வறியவர்களாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை

## கே.டி.லால்காந்த சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாட்டில் சம உரிமை பற்றிய கருத்துக்களை வெளியிடுகின்றவர்கள் வறியவர்களாக இருக்கவேண்டுமென்ற அவசியமில்லையென மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டில் புதிய அரசியலமைப்பு ஒன்றினை உருவாக்கும்வரை தற்போது நிலவும் அரசியலமைப்பை மதித்து நடப்போம். ஆனால் அதனை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

இதேவேளை சம உரிமை தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணி தொடர்ச்சியாக பல கருத்துக்களை வெளியிட்டு வருகின்றது.

இதில் சம உரிமை தொடர்பில் கருத்துக்களை வெளியிடுகின்ற மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்களில் பெரும்பாலானோர் செல்வந்தர்கள் ஆவர்.

ஆகையால் சம உரிமை தொடர்பில் கருத்துக்களை வெளியிடுவதற்கு வறியவர்களாக இருக்கவேண்டிய அவசியமில்லை" என கே.டி லால்காந்த சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கோபம்

அடிக்கடி கோபப்படாதே கோபப்படாதே என்று சொல்லிக்கிட்டிருக்கியே அது எப்படி முடியும்? அப்படி என்று சொல்லி கோபப்படறவங்க சில பேரு உண்டு.

இது நியாயமான கோபம்!

ஒருத்தரை ஒருத்தர் நல்லா புரிஞ்சுக்கிட்டா கோபம் வராது என்று சொல்றது உண்டு. ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சிக்கறதுக்கு முந்தி முதல்லே இந்த கோபத்தை பற்றியே கொஞ்சம் புரிஞ்சிக்க வேண்டியிருக்கு.

கோபம் வர்றது இயற்கை. அதைப்பயன்படுத்தற விதத்தை பொறுத்துதான் அது நல்லது செய்யிறதும் கெடுதல் செய்யிறதும்!

சரி அது இருக்கட்டும்.

இன்றைக்கு அறிவியல் ரீதியான அந்த கோபத்தை பற்றி கொஞ்சம் அலசுவோம். அதாவது அறிவியல் பார்வையிலே கோபத்தை பற்றி ஒரு ஆராய்ச்சி.

இயல்பூக்கம் என்று சொல்றோம் Natural Instinct அதிலே கோபம் ஒண்ணு!

ஒரு சிறந்த நோக்கத்தோட கோபத்தை இயற்கை நம்மகிட்டே கொடுத்திருக்கு. அதை முதலில் நாம புரிஞ்சுக்கொள்ள வேண்டும்.

விஞ்ஞானத்தை பொறுத்தவரைக்கும் 'கோபம்' ங்கறது ஒரு சக்தி!

ஒரு தற்காப்பு சக்தியான உபயோகப் படுறதுகாக உயிரினம் எல்லாத்துக்கும் இயற்கை இந்த கோபத்தை கொடுத்திருக்கு.

முள்ளம்பன்றி –சிலிர்க்குது! பாம்பு படம் எடுக்குது! தேள் கொடுக்கைத் தூக்குது! புலி உறுமுது!சிங்கம் கர்ஜிக்குது! கழுதை பின்னாங்கலை உதறுது!இதெல்லாம் கோபம்தான். எதுக்காக இந்த கோபம் தற்காப்புக்காக!

எறும்புலே இருந்து மனுஷன் வரைக்கும் எல்லா உயிரின மும் அது அது பாணியிலே கோபத்தை காட்டிக்கிட்டுத்தான்இருக்கு!

கழுதை உதைக்காது –மாடு முட்டாது –தேள் கொட்டாது–புலி பாயாது அப்படின்னா அதெல்லாம் இந்த உலகத்துலே இல்லாமே அழிஞ்சி போயிடும். இயற்கையோட பாதுகாப்பு விதிப்படி அது அது தன்னுடைய முறைப்படி கோபத்தை காட்டித்தான் தீரணும். இந்த தேள் இருக்கே அதுரொம்ப சாது !ஒருத்தரையும் கொட்டவே கொட்டாதுன்னா .

அது இறப்பர் தேளுன்னு அர்த்தம்!

மத்த உயிரினத்துக்கும் மனுஷனுக்கும் ஒருவித்தியாசம் உண்டு. இவனுக்கு ஆறாவது அறிவு ஒண்ணு இருக்கு அதுதான் பகுத்தறிவு!

அதனால் இவன் தற்காப்புக்காக மட்டும் இல்லாமே வேறே ஒரு காரணத்துக்காகவும் கோப உணர்ச்சியை பக்குவமாக பயன்படுத்த கடமைப்பட்டிருக்கான்!அதைத்தான் Righteous Indignation சொல்லலாம்.

நியாயத்துக்காக கோபப்படுங்க!

நீதியை நிலை நாட்டறதுக்காக கோப உணர்ச்சியைப் பயன்படுத்துங்கள்!

மகான்களுடைய கோபம்

காந்தியடிகள் சத்தியாகிரகம்

கடவுள் நெற்றிக்கண்ணை காட்டினார்ன்னுசொல்றோமே. அதெல்லாம் இந்த வகையைச் சேர்ந்த கோபம்!

கோபம் ஒரு சக்தி ஊற்றுன்னு விஞ்ஞானம் சொல்லுது. அதுக்கு அடையாளம் என்ன தெரியுமா?

நெஞ்சு படபடக்குது!உதடு துடிக்குது! பல்லு நறநறன்னு கடிச்சி விட்டது! கண்ணு சிவக்குது!ரத்தம் வேகமாக ஓடுது! மூச்சு திணறது!மொத்தத்துலே உடம்பு பூராவும் அந்த சக்தியோட வெளிப்பாட்டை தாங்க முடியாமல் நடுநடுங்குது. சராசரி மனுஷனுக்கு கோபம் வெளிப்படுற விதம் இப்படி! மகான்கள் கோப சக்தியை இப்படி வெளிப்படுத்திறதில்லை!

அது நெற்றிக்கண்ணா வரும் –சத்தியாக்கிரகமாக வரும்! தண்ணீரை அணைக்கட்டி வெளிப்படுத்திறது மாதிரி நிர்மாண சக்தியா அது வெளியே வருது!

நாமெல்லாம் என்ன பண்றோம்? கோபத்தை வெறுப்புணர்ச்சியா மாத்திவிடுகிறோம். அப்புறம் அவஸ்தைப்படுகிறோம். Suppressed anger is hatred என்று சொல்லுவாங்க!

அதனாலே தான் கோபத்தை பாவம் என்று பெரியவங்க சொல்லிவச்சாங்க!

கோபமும் வெறுப்பும் சேர்ந்தா பாவம்!

கோபமும் அன்பும் சேர்ந்தா புண்ணியம்!

அநீதி பேர்லே கோபம் வருதா ....அதோட அன்புங்கற உஷ்ணத்தை சேருங்க – அது தான் சத்யாக்கிரகம்!அந்த அற்புதத்தை பண்ணிக் காட்டியவர் காந்தி! அதனாலே கோபத்தை வெறுக்காதீங்க! அதைப் புரிஞ்சிக்குங்க!

கோபமும் அன்பும் சேர்ந்தா புண்ணியம் என்று சொன்னேன் அல்லவா. அதனாலே தான் பல தம்பதிகள் புண்ணியம் செய்த தம்பதிகளா இருக்காங்க. அது ரெண்டுலே ஒண்ணு கோபம் !இன்னொன்னு 'அன்பு'!


கோபம் வேண்டாம்ன்னு தான் நினைக்கிறோம். அதுக்காக நேரடியாகவே வந்த ஒருத்தர் உங்க பாக்கெட்லே உள்ள பணத்தை எடுத்துக்கிட்டு போனாஅவரை மறுபடியும் கூப்பிட்டு இந்தாங்க இன்னொரு பாக்கெட்லே பத்து ரூபா இருக்கு அதையும் சேர்த்து எடுத்துகிட்டு போங்க!ன்னா சொல்லுவீங்க!

ஒருத்தர் எதுக்கெடுத்தாலும் அர்த்தமில்லாமே கோபப்படுவார். அவருக்கு மற்றவர்கள் 'சிடுமூஞ்சி' என்று பேரு வைத்தார்கள். ஒருநாள் அவரை தேடிக்கிட்டு ஒருத்தர் வந்தார்.

இந்த ஊர்லே ஒரு சிடுமூஞ்சி இருக்காமே!யார் வந்து எதை கேட்டாலும் எனக்குத் தெரியாது எனக்கு தெரியாதுன்னு கத்துமாமே அதை உங்களுக்கு தெரியுமான்னு விசாரிச்சார்.

இவரு கோவமா 'தெரியாது'! என்றார்.

# இன உறவுகளைச் சிதைத்த சிங்களம் மட்டும் சட்டமும் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலமும்



10

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

அவர் பிரதமராக பதவியிலிருந்த காலம் ஓராண்டு தான். ஆனால் அந்த ஓராண்டிற்குள் இலங்கை அரசியல் வரலாற்றில் முன் மாதிரியான தலைவர் என்ற பெயரையும் புகழையும் பெற்றார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களை அமைச்சுப் பதவியிலிருந்து அவர் நீக்கியமையால் வரவிருக்கும் தேர்தலில் இக்கட்சியின் ஆதரவு தனக்கு கிடைக்கும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை.

அதனால் இவர் லங்கா பிரஜாதந்திரவாதி கட்சியை (லங்கா ஜனநாயகக் கட்சியை) உருவாக்கி அதன் சார்பில் 1960 மார்ச் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டார்.

தேர்தல் முடிவு வரும் வரையில் காபந்து அரசின் பிரதமராக அவர் இருந்ததால் அந்த பதவிக் குரியவரின் அரச வாசஸ்தலம் அலரி மாளிகை என்பதால் அங்கேயே குடியிருந்தார். இலங்கை வானொலி தொகுதி வாரி தேர்தல் முடிவுகளை நள்ளிரவு முதல் ஒலிபரப்பத் தொடங்கியது.


பிரதமர் தஹநாயக்க அலரி மாளிகையில் இருந்தவாறு முடிவுகளை வானொலியில் செவிமடுத்தார். அதிகாலை விடிவதற்குள் வந்திருந்த முடிவுகளின் பிரகாரம் அவரது தோல்வி நிச்சயமாகிவிட்டது. விடிந்ததும் சபாநாயகருக்கும் மகா தேசாதிபதிக்கும் தொலைபேசியில் தொடர்புகொண்டு தனது பதவிக்காலம் முடிந்துவிட்டது.

நான் ஊருக்குப்புறப்படுகின்றேன். மீண்டும் கொழும்பு வரும் சந்தர்ப்பம் கிடைத்தால் உங்களைச் சந்திக்கின்றேன் என்றார்.

இன்றும் நீங்கள்தான் காபந்து அரசின் பிரதமர். தேர்தல் முடிவுகள் அனைத்தும் வெளியானதும் தேர்தல் ஆணையாளர் அறிவிக்கும் வரையில் அங்கேயே இருங்கள். ஊருக்குச் செல்லவேண்டாம் என்று அவர்கள் வலியுறுத்திச் சொன்ன போதிலும் அவர்களின்வேண்டுகோளை அலட்சியம் செய்து இவர்கள் யார் எனக்குச் சொல்வது மக்கள் சொல்லி விட்டார்கள்.

மக்கள்தான் என்னை இங்கே அனுப்பியவர்கள். அதே மக்கள் இன்று தீர்ப்புச் சொல்லிவிட்டார்கள். நான் போகிறேன் எனச் சொன்னவர்தான் "மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு" என்று வாழ்ந்து காண்பித்த தஹநாயக்க அவர்கள்.

தன்னிடமிருந்த ஒரு பழைய சிறிய சூட்கேஸினுள் தனது ஒரு சில உடைகளை மாத்திரம் எடுத்துக்கொண்டு அலரி மாளிகையில் பணியிலிருந்த சேவகர்களிடம் "மங் என் னாங் புதாலா" (நான் வருகிறேன்மகன்மாரே) எனச்சொல்லிவிட்டு அந்த பிரமாண்டமான மாளிகையின் பிரதான வாயிலிலிருந்து வெளியேறி காலி வீதியை கடந்து எதிர்ப்பக்கம் சென்று கொழும்பு புறக்கோட்டைக்குச் செல்லும் இ.போ. ச. பஸ்ஸில் ஏறிச்சென்று அங்கிருந்து காலிக்குச் செல்லும் பஸ்கள் வந்து தரிக்கும் இடத்தில் நின்றார். லேக்ஹவுஸ், வீரகேசரி, ரைம்ஸ் ஒஃப் சிலோன் பத்திரிகை நிறுவனங்களிலிருந்து தேர்தல் முடிவுகளை வானொலியில் கேட்டு எழுதிக்கொண்டிருந்த ஊடகவியலாளர்கள், காபந்து பிரதமர் தஹநாயக்க அடுத்து என்ன செய்யப்போகிறார்? என்பதை அறிவதற்கு அலரி மாளிகைக்கு தொடர்பு கொண் டனர்.



தஹநாயக்கா பிரதமராக முதலாவது கோவையில் கையொப்பமிடல்

அங்கிருந்து கிடைத்த பதில் "மாத்தயா கமட கியா" (அய்யா ஊருக்குப் போய்விட்டார்) ஊடகவியலாளர்கள் தாமதமின்றி புறக்கோட்டை பஸ் நிலையத்திற்கு விரைந்தனர். தஹநாயக்க பஸ் நடத்துநரிடம் பணம் நீட்டி டிக்கெட் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

அந்த நேரத்தில் தன்னைத் தேடி வந்த ஊடகவியலாளர்களிடம் "இனித்தான் உங்களுக்கு அதிகம் வேலை இருக்கும். எதற்காக வீணாக என்னைத்தேடி வந்தீர்கள். திருப்பிப்போய் செய்யவேண்டிய வேலைகளை கவனியுங்கள்" எனச்சொல்லிக்கொண்டு பஸ்ஸில் ஏறி அமர்ந்தார்.

வெளியே அவரை அதிசயத்துடனும் அதிர்ச்சியுடனும் பார்த்துக்கொண்டிருந்த ஊடகவியலாளர்களிடம் "மங் என்னாங் புதாலா" ( நான் வருகிறேன் மகன்மாரே) எனச் சொல்லிக்கொண்டு விடைபெற்றார் கல்விமான் எனப் பெயரெடுத்த அந்தக் கனவான். மக்களின் நன்மதிப்பும் பேராதரவும் அவருக்கு தொடர்ந்திருந்தது. மீண்டும் மீண்டும் காலி தொகுதியில் வென்று நாடாளுமன்றம் வந்தார். 1989 வரையில் அவர் அங்கு வந்தார். ஆனால் காரில் அல்ல. இ.போ.ச. பஸ்ஸில் தான் வந்து திரும்பினார்.

அவர் 1960 மார்ச் தேர்தலில் தோற்ற பின்னர் அதன் பின் நடந்த 1960 ஜூலை தேர்தலில் லங்கா பிரஜாதந்திரவாதி கட்சியிலும் 1965 தேர்தலில் சி.பி.டி. சில்வா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திர சோசலிஷக் கட்சியிலும் காலித் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

1965 முதல் 1970 வரை டட்லி சேனாநாயக்க தலைமையிலான அரசில் உள்ளூராட்சி அமைச்சராக நியமிக்கப்பட்டார். 1970 தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் காலித் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

1977 தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிட்டுத் தோற்றாலும், பின்னர் 1979 இல் காலித் தொகுதிக்கு இடம் பெற்ற இடைத் தேர்தலில் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று 1989 வரை நாடாளுமன்றம் சென்றார்.

1986 முதல்1988 வரை கூட்டுறவுத்துறை அமைச்சராகவும் பதவியில் இருந்தார். இந்நாட்டில் கல்வியமைச்சராக, உள்நாட்டமைச்சராக, ஏன் பிரதமராகவும் கூட இருந்த கலாநிதி விஜயானந்த தஹநாயக்க அப்பதவிகள் வகிக்கும் காலத்தில் பொதுப் போக்குவரத்து வாகனங்களான பஸ்களில், புகையிரதங்களில் பயணித்தமை வரலாறாகும்.

ஒருதடவை அன்றைய அரசு உடுபுடைவைகளின் விலையை உயர்த்தியதை கண்டித்து, ஏழை மக்களுக்காக குரல் கொடுப்பதற்கு கோவணம்அணிந்து நாடாளுமன்றத்திற்கு வந்திறங்கினார். ஆனால், சபாநாயகர் அவரை அந்த ஆண்டிகோலத்தில் நாடாளுமன்றின் உள்ளே அனுமதிக்கவில்லை.

ஆனால், சமகாலத்தில்தூய வெண்ணிற ஆடைகளை அணிந்து சொகுசு வாகனங்களில் நாடாளுமன்றம் வரும் அரசியல்வாதிகள், அநாகரிகமாக நடந்து அம்மணமாகியிருக்கிறார்கள். அந்த "அம்மணக்காட்சி" களை ஊடகங்களில் பார்த்து வருகின்றோம். இவ்வாறு பல தகவல்களை முருகபூபதி தேனீ இணையத் தளத்தில் எழுதியிருந்தார்.

(முற்றும்)



தஹநாயக்கா கோவணம் அணிந்து பாராளுமன்றம் செல்லல்

# தேர்தலுக்காக சர்வஜன வாக்கெடுப்பை நாடுவது தேச விரோதச் செயற்பாடு-பவ்ரல் காட்டம்

(கொழும்பு)

இலங்கையில் தேர்தலொன்று அவசியமா? இல்லையா? என்பது தொடர்பாக தீர்மானிப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென சில அரசியல் வாதிகள் குறிப்பிடுவது தேர்தலின் ஜனநாயத்தை இல்லாமல் செய்யும் தேச விரோதச் செயற்பாடென பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி கடுமையாக விமர்சித்துள்ளார்.



நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்திய ஒரு தரப்பினர் தற்போது தேர்தல் தொடர்பிலும் குழப்பநிலையை ஏற்படுத்தி வருவதாக பரவலாக பேசப்பட்டு வருகின்றது.

இவ்விடயம் தொடர்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே ரோஹண ஹெட்டியாராச்சி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதியிலிருந்து சாதாரண பிரஜைவரை அனைவரும் நாட்டில் காணப்படுகின்ற சட்டதிட்டங்களை மதித்து அதற்கேற்றவாறே செயற்படவேண்டும். .

ஆனால் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் அரசியலமைப்பை மதித்துச் செயற்படாமையால் தற்போது பாரிய பிரச்சினை நாட்டில் தோற்றம் பெற்றுள்ளது.

இவ்வாறு தங்களுக்கான கடமையை மறந்து அதற்கு முரணாக செயற்படுகின்றமையானது தேசப்பற்றுக்கு விரோதமான செயலாகும்.

ஆகையால் அரசியல்வாதிகள் அனைவரும் மக்களையும், நாட்டையும் கருத்திற்கொண்டு சிந்தித்து செயலாற்றவேண்டியது அவசியம்" என ரோஹண ஹெட்டியாராச்சி மேலும் வலியுறுத்தியுள்ளார்.(இ-7)

## அராஜக அரசியலுக்கு முற்றுப்புள்ளி விரைவில் ஐ.தே.க.அரசாங்கம்-ரவி

(கொழும்பு)

சுயாதீனமாக செயற்பட்ட உயர் நீதிமன்றம் ஜனநாயகத்தையும் மக்கள் ஆணையையும் மீண்டுமொருமுறை உறுதிப்படுத்தியுள்ளது.

50 நாட்களாகத் தொடர்ந்த அராஜக அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்து ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தை மீண்டும் ஸ்தாபிப்போம் என பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றக் கலைப்பு தொடர்பில் ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை சவாலுக்குட்படுத்தும் வகையில் முன்வைக்கப்பட்ட மனு தொடர்பான



தீர்ப்புக்கு ஆஜராகியிருந்த போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## பாராளுமன்றத் தேர்தல் இன்றி உண்மையான நீதி கிடையாது

### நாமல் எம்.பி. கூறுகிறார்



(கொழும்பு)

நீதிமன்றத்தின் தீர்ப்பை நாங்கள் மதிக்கின்றோம் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் செய்தியில் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தின் தீர்ப்பு குறித்து எங்களுக்கு மாறுபட்ட கருத்துக்கள் உள்ள போதிலும் நாங்கள் தீர்ப்பை மதிக்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாராளுமன்றத் தேர்தல் அவசியம் என குரல்கொடுப்பவர்களின் பக்கமே நாங்கள் தொடர்ந்து நிற்போம் எனத் தெரிவித்துள்ள நாமல் ராஜபக்ஷ பாராளுமன்ற தேர்தல் இல்லாமல் மக்களுக்கு உண்மையான நீதி கிடைக்காது எனவும் தெரிவித்தார். (இ-7)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1587

Search for people, places and things


### சிவநேசன்

நீ கொடுத்த மரியாதையும் நீ செய்த தானமும் நீ செய்த துரோகமும் கண்டிப்பாக ஒருநாள் உன்னைத் தேடி வந்து நீ செய்ததைவிட சிறப்பாக செய்துவிட்டே போகும்



### கம்சாயினி

நிறைகுடமும் வெறும் குடமும் தளம்புவதில்லை. குறைகுடங்கள்தான் தன்னிலை தாழ்த்தப்படுவது கூட தெரியாமல் ஓலமிடுகிறார்கள் சபை அறிந்து பேசு



### பவித்திரா

இறப்பு என்பது பெரிய இழப்பல்ல... உறவுகளை இழந்து உயிருடன் இருப்பதுதான் பெரிய இழப்பு



### அஞ்சனா

கடவுள் வரம் எல்லாம் தரமாட்டார்... சந்தர்ப்பம் தான் தருவார். அதை வரமாக்குவதும் .சாபமாக்குவதும் உன் கையில்தான் உள்ளது



### ஆதி

வாழ நினைப்பவனுக்கு வானம்கூட வாயிற்படிதான்



### ஹரிஸ்

பழி வாங்கிறதுன்னா அடிக்கிறது, உதைக்கிறது, அவமானப்படுத்துவது இல்லை அவங்க கண் முன்னாலேயே ஜெயிக்கனும், வாழ்ந்து காட்டனும்.



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

120



"ஐரோப்பாவில் பிரான்சுக்கு எதிரான போராட்டத்தில் பிரித்தானியா வெற்றி பெற இந்தியாவிலும் இலங்கையிலும் பிரித்தானியரின் ஆதிக்கம் மேலோங்கியது. பதினெட்டாம் நூற்றாண்டு முடிவடையும் காலகட்டத்தில் டச்சுக்காரர் இலங்கையில் தாம் ஆண்ட நிலப்பகுதியை இழக்க பிரித்தானியர் ஆட்சி தொடங்கியது. இந்தியாவிலும் பிரெஞ்சுக்காரர் தோல்வியுற்றதன் விளைவாக பிரித்தானியர் மேலாதிக்கம் எழுந்தது"

## பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக்காலமும் தமிழரும் (கி.பி. 1796-கி.பி. 1850)

பதினாறாம் நூற்றாண்டில் ஆசியாவில் போர்த்துக்கீசருடன் தொடங்கிய ஐரோப்பிய ஏகாதிபத்தியம் பதினேழாம் நூற்றாண்டில் ஒல்லாந்தர் ஆதிக்கப் படர்ச்சியுடன் மேலும் ஒரு படி உயர்ந்து பதினெட்டாம் நூற்றாண்டில் இன்னொரு புதிய கட்டத்தை அடைந்தது.

புதிய ஐரோப்பிய வல்லரசுகளாகிய பிரித்தானியாவும் பிரான்சும் பதினேழாம் நூற்றாண்டில் ஆசியாவில் தத்தம் ஆதிக்கத்தைப் பரப்பத் தொடங்கின.

போர்த்துக்கீசப் பேரரசும் ஒல்லாந்தப் பேரரசும் ஆசியாவில் வலுவிழக்கத் தொடங்கியதாலும் இந்தியப் பேரரசாகிய மொகலாயப் பேரரசு வீழ்ச்சியடையத் தொடங்கியதாலும் தென்னாசியாவில் ஒரு புதிய வல்லரசு எழுச்சி பெற வாய்ப்பு ஏற்பட்டது.

இவ் வாய்ப்பினைப் பயன்படுத்த பிரித்தானியாவும் பிரான்சும் போட்டியிட்டன. தென்னாசியாவின் எதிர்காலம் மட்டுமன்றி உலகின் எதிர்காலமே இப்போட்டியின் முடிவில் தங்கியிருந்தது.

இந்த இரண்டு ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடையில் தோன்றிய போட்டியில் பிரித்தானியா வெற்றி பெறாது பிரான்ஸ் வெற்றி பெற்றிருந்தால் இன்று ஆசியாவில் ஆங்கில மொழியும் ஆங்கிலப் பாராளுமன்ற ஆட்சி முறையும் மேலோங்கியிருக்கமாட்டா.

அதுமட்டுமன்றி உலகில் இன்று ஆங்கில மொழியும் ஆங்கிலேய அமைப்புக்களின் அடிப்படையில் எழுந்த அமெரிக்க ஆதிக்கமும் இல்லாத ஒரு நிலை தோன்றியிருக்கும் என்று கூறக்கூடிய அளவுக்கு உலகின் போக்கு கடந்த மூன்று நூற்றாண்டுகளிலும் வேறாக அமைந்திருக்கும்.

சுருங்கக்கூறின் இன்றைய உலகில் ஆதிக்கம் பெற்றுள்ள சக்திகள் அவ்வாறான நிலைமையுற்றமைக்குக் காரணம் பிரித்தானியா, பிரான்சுக்கு எதிரான போராட்டத்தில் ஆசியாவிலும் வட அமெரிக்காவிலும் வெற்றி பெற்றதன் விளைவேயாகும்.

18 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தென்னாசியாவில் அதாவது இந்தியாவையும் இலங்கையையும் உள்ளடக்கிய பிராந்தியத்தில் ஒல்லாந்து, பிரித் தானியா, பிரான்சு ஆகிய மூன்று ஐரோப்பிய வல்லரசுகளும் ஏறக்குறையச் சமனான வலுவுடன் காணப்பட்டன.

இலங்கையின் கரையோரப் பிரதேசத்தில் மட்டுமன்றி தமிழ்நாட்டுக் கரையோரத்தில் நாகபட்டினம் போன்ற இடங்களிலும் டச்சுக்காரர் அதிகாரம் பெற்றிருந்தனர்.

ஆங்கிலேயர் தமிழ்நாட்டின் கரையோரத்தில் சென்னையிலும் (மதராஸ்), மேற்கு கரையில் பம்பாயிலும் (மும்பை), வங்காளக் கரையில் கல்கத்தாவிலும் (கொல்கத்தா), வேறுசில இடங்களிலும் தங்கள் அதிகார நிலையங்களை அமைத்திருந்தனர்.

பிரெஞ்சுக்காரர் இந்து சமுத்திரத்தில் மொரிசியஸ் தீவுகளிலும் தமிழ்நாட்டுக் கரையில் புதுச்சேரி மற்றும் காரைக்கால் போன்ற இடங்களிலும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டியிருந்தனர்.

இக்காலகட்டத்தில் ஐரோப்பாவில் தோன்றிய அரசியல் பிரச்சினைகளால் ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் ஒருவருக்கொருவர் பகைவராகிவிட்டனர். இவர்களுக்கிடையில் சிக்கிய டச்சுக்காரர் பல பிரச்சினைகளை எதிர்நோக்கினர். இவற்றின் தாக்கத்தை இலங்கையிலும் இந்தியாவிலும் பார்க்க முடிகிறது.

இந்த மூன்று ஐரோப்பிய நாடுகளுக்கிடையில் நடந்த போராட்டத்தின் விளைவாகவே இலங்கையும் இந்தியாவும் 18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்டன.

இப்போராட்டத்திற் திருகோணமலை ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் ஆதிக்கம் பெற விரும்பிய எந்த வல்லரசுக்கும் திருகோணமலைத் துறைமுகம் மிகவும் அத்தியாவசியமானதாக விளங்கியது.

இதனால் டச்சுக்காரரும் பிரித்தானியரும் பிரெஞ்சுக்காரரும் பதினெட்டாம் நூற்றாண்டில் மாறி மாறித் திருகோணமலையைக் கைப்பற்றினர். இதற்காக இலங்கையின் கண்டி மன்னனுடன் நல்லுறவு கொண்டிருப்பதும் இந்த ஐரோப்பிய வல்லரசுகளுக்கு அவசியமானதாக இருந்தது.

இலங்கையின் கரையோரப் பிரதேசம் டச்சுக்காரருடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. ஆனால் இலங்கையின் மத்திய பகுதியில் கண்டி அரசு தமிழ் பேசும் நாயக்கர் வம்சத்தின் ஆளுகைக்குட்பட்டிருந்தது.

கண்டி மன்னனுடன் நல்லுறவு கொண்டிருப்பதற்காக பிரித்தானியர் பல தடவை அவனுக்குத் தூது அனுப்பினர். டச்சுக்காரரும் அவனுடன் உடன்படிக்கை செய்தனர். டச்சுக்காரரை இலங்கையிலிருந்து வெளியேற்ற விரும்பிய கண்டி மன்னன் தன் ஆதரவை பிரித்தானியருக்கு வழங்கினான்.

இந்நிலையில் ஐரோப்பாவில் பிரான்சுக்கு எதிரான போராட்டத்தில் பிரித்தானியா வெற்றி பெற இந்தியாவிலும் இலங்கையிலும் பிரித்தானியரின் ஆதிக்கம் மேலோங்கியது.

பதினெட்டாம் நூற்றாண்டு முடிவடையும் காலகட்டத்தில் டச்சுக்காரர் இலங்கையில் தாம் ஆண்ட நிலப்பகுதியை இழக்க பிரித்தானியர் ஆட்சி தொடங்கியது. இந்தியாவிலும் பிரெஞ்சுக்காரர் தோல்வியுற்றதன் விளைவாக பிரித்தானியர் மேலாதிக்கம் எழுந்தது.

(தொடரும்)

# ஜீப் - பேருந்து மோதி விபத்து; 6 பேர் உடல் நசுங்கி உயிரிழப்பு

## திருமண வீட்டிற்கு சென்ற வேளை பயங்கரம்



(காத்மண்டு)

நேபாளத்தில் பேருந்தும் ஜீப்பும் மோதிய விபத்தில் மணமகனின் பெற்றோர் உட்பட 6 பேர் பரிதாபமாகப் பலியாகினர்.

நேபாள நாட்டின் கீதா நகரில் இருந்து ஷம்ஷெர்கஞ்ச் பகுதியை நோக்கி பயணிகள் பேருந்து நேற்று முன்தினம் சென்று கொண்டிருந்தது.

நேபாளத்தின் மேற்கு பகுதியில் உள்ள டாங் மாவட்டத்தின் லமாஹி பகுதியில் வரும்போது முன்னாள் சென்ற ஜீப் மீது வேகமாக மோதியது.

இந்த விபத்தில் ஜீப்பில் பயணம் செய்த 6 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பரிதாபமாக பலியாகினர். ஜீப் சாரதி உட்பட பலர் படுகாயம் அடைந்தனர்.

தகவலறிந்து பொலிஸார் அங்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். காயம் அடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலைக்கு அனுப்பினர்.

பொலிஸார் நடத்திய விசாரணையில், ஜீப்பில் பயணம் செய்தவர்கள் தங்களது மகன் திருமணத்துக்கு சென்று கொண்டிருந்ததும், உயிரிழந்தவர்களில் மாப்பிள்ளையின் தாய், தந்தையும் அடங்குவர் என்பதும் தெரிய வந்தது அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (4-7)

# விண்வெளியின் எல்லையை தொட்டுத் திரும்பிய விமானம்



(வோஷிங்டக்)

அமெரிக்காவின் வெர்ஜின் கேலக்டிக் நிறுவனத்துக்கு சொந்தமான விண்வெளிக்கு செல்லக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட சிறப்பு விமானம் விண்வெளிக்கு மிகவும் அருகில் சென்று திரும்பியுள்ளது.

ஸ்பேஸ்-ஷிப்-டூ என்று அழைக்கப்படும் அந்த விமானம் பூமியிலிருந்து 82.7 கிலோமீற்றர் உயரத்துக்கு பறந்தது. இது அந்த விமானத்தின் நான்காவது பரிசோதனை பயணமாகும்.

மனிதர்களை விண்வெளிக்கு சுற்றுலா அழைத்துச் செல்லும் போட்டியில் எலோன் மஸ்கின் ஸ்பேஸ் எக்ஸ் மற்றும் ஜெஃப் பெஸோஸின் ப்ளூஒரிஜின் நிறுவனங்களுடன் சர் ரிச்சர்டு பிரான்சனின் வெர்ஜின் கேலக்டிக் நிறுவனமும் ஈடுபட்டுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை தனது சோதனை ஓட்டத்தை மேற்கொண்ட குறித்த விமானம் கலிபோர்னிய பாலைவன பகுதிக்கு பாதுகாப்பாக மீளத்திரும்பியது.

அமெரிக்காவின் விண்கல திட்டங்கள் கடந்த 2011 ஆம் ஆண்டு நிறைவுக்கு வந்த பின்னர் விண்வெளிக்கு மனிதர்களை கொண்டு செல்லும் விமானங்கள் தொடர்பாக கடினமாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் அடிப்படையில் இந்த முயற்சி வெற்றியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

# கிறிஸ்மஸ் சந்தையில் துப்பாக்கிச்சூடு; துப்பாக்கிதாரி பொலிஸாரால் சுட்டுக்கொலை

பிரான்ஸின் - ஸ்ட்ராஸ்பர்க் நகரில் உள்ள கிறிஸ்மஸ் சந்தையில் துப்பாக்கிச்சூடு நடத்தி மூன்று பேரை கொலை செய்த செரிஃப் செகாட் என்ற நபர் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டதாக பிரான்ஸ் உள்விவகார துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பிரான்ஸ் மற்றும் ஜேர்மனியின் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த குறித்த நபர், சிறையில் இருந்தபோது தீவிர இஸ்லாமிய வாதியாக செயற்பட்டு வந்துள்ளார்.

சந்தேகநபர் மறைந்திருந்ததாக கருதப்படும் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது அவர் சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி உள்துறை அமைச்சர் கிறிஸ்டோபே காஸ்டனர் தெரிவிக்கையில், மூன்று பொலிஸ் அதிகாரிகள் ஸ்ட்ராஸ்பர்க் பகுதியில் உள்ள நியுடோஃவ் - ரூ டு லஸார்ட் பிரதேசத்தில் சுற்றிவளைத்து தேடுதல் மேற்கொண்ட போதே சந்தேகநபரை கண்டுபிடித்துள்ளதாக தெரிவித்தார்.

இதன்போது. குறித்த நபர் தப்பிக்க முயற்சித்ததுடன், பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள முயற்சித்த போது பொலிஸார் பதில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அதன்பின்னர் சம்பவ இடத்திற்கு சென்ற உள்துறை அமைச்சர் இந்த தகவல்களை ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

துப்பாக்கிதாரியை தேடும் முயற்சியில் நூற்றுக்கணக்கான பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். நேற்று முன்தினம் தொடக்கம் பாரிய தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட போதும் நேற்று இரவு சுட்டுக்கொல்லப்பட்டார். (4-7)

# 8 வழிச்சாலைத் திட்டத்துக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

## முதல்வர் கோரிக்கை



(சென்னை)

8 வழிச்சாலைத் திட்டத்துக்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்தோடு துணை முதல்வர் மற்றும் அமைச்சர்கள் அனைவருக்கும் முழுமையான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதால் தமிழக அரசாங்கம் சிறப்பாக செயற்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சேலத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "ஒவ்வொரு ஆண்டிலும் 17 இலட்சம் வாகனங்கள் அதிகரித்துக் கொண்டே செல்வதால் சாலையில் வாகன நெரிசல் அதிகமாகி பல விபத்துக்கள் ஏற்படுகின்றன.

இதன் காரணமாக 8 வழிச்சாலைத் திட்டத்தினை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பல அமைப்புகள் தடை செய்த போதிலும் நாட்டின் நலன் கருதி இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டிருப்பதால் அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும்" என்று கோரிக்கை விடுத்துள்ளார். (4-7)

# ரபேல் ஒப்பந்த முறைகேடு குறித்து விசாரணைக்கு உத்தரவிட முடியாது

## உச்சநீதிமன்றம் தீர்ப்பு

(டில்லி)

ரபேல் போர் விமான ஒப்பந்த முறைகேடு புகார்கள் குறித்து விசாரணைக்கு உத்தரவிட முடியாது என உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு நேற்று தீர்ப்பு வழங்கி உள்ளது.

பிரான்ஸ் நாட்டை சேர்ந்த டசால்ட் ஏவியேசன் நிறுவனத்திடம் இருந்து ரூ.58 ஆயிரம் கோடி மதிப்பில் 36 'ரபேல்' போர் விமானங்களை வாங்க இந்தியா ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இந்த விவகாரத்தில் முறைகேடு நடந்ததாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி வருகின்றன.

இதற்கிடையே, இந்த பேரம் குறித்து உச்ச நீதிமன்றம் கண்காணிப்புடன் கூடிய விசாரணைக்கு உத்தரவிடக்கோரி, சட்டத்தரணி எம்.எல். சர்மா என்பவர் உச்ச நீதிமன்றம் மனுத்தாக்கல் செய்தார். பிறகு, சட்டத்தரணி வினீத் தண்டா என்பவரும் அதே கோரிக்கையுடன் மனுத்தாக்கல் செய்தார். ஆம் ஆத்மி பிரமுகர் சஞ்சய் சிங்கும் வழக்கு தொடர்ந்தார்.

பின்னர், முன்னாள் மத்திய அமைச்சர்கள் யஷ்வந்த் சின்ஹா, அருண் ஷோரி மற்றும் சட்டத்தரணி பிரசாந்த் பூஷண் ஆகியோர் இந்த விவகாரம் தொடர்பாக வழக்கு பதிவு செய்யுமாறு சி.பி.ஐ.க்கு உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்தனர்.

இந்த மனுக்கள் மீது தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் தலைமையிலான அமர்வு விசாரணை நடத்தியது. விசாரணை முடிந்த நிலையில், கடந்த மாதம் 14ஆம் திகதி, குறிப்பிடாமல் தீர்ப்பை ஒத்திவைத்தது.

இந்நிலையில், தலைமை நீதிபதி அமர்வு, இம்மனுக்கள் மீது நேற்று தீர்ப்பு அளித்தது. அப்போது 'ரபேல்' விவகாரத்தில் விசாரணைக்கு உத்தரவிட முடியாது என நீதிபதிகள் தெரிவித்தனர். அத்துடன் விசாரணை கோரிய அனைத்து மனுக்களையும் தள்ளுபடி செய்தனர்.

ரபேல் போர் விமானம் வாங்கும் அரசின் கொள்கை முடிவு சரியானதுதான் என்றும், அரசின் கொள்கை சார்ந்த முடிவுகளில் நீதிமன்றம் தலையிட முடியாது என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர். (4-7)

# சவுதி அரேபிய கூட்டுப்படைக்கான இராணுவ ஆதரவை முடிவுக்குக் கொண்டு வர செனட்சபை வாக்களிப்பு

(வோஷிங்டன்)

ஏமன் போரில் சவுதி அரேபியா தலைமையிலான கூட்டு படையினருக்கான அமெரிக்க இராணுவ ஆதரவை முடிவுக்கு கொண்டு வருவதற்கான ஒரு தீர்மானத்தை முன்னெடுத்துச் செல்ல செனட் சபை உறுப்பினர்கள் வாக்களித்தனர்,

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடனான ஒரு அரிதான முறிவின் அடிப்படையில், அமெரிக்க செனட் சபை கடந்த புதன்கிழமை வாக்களித்துள்ளது. மேலும் சட்டமன்ற உறுப்பினர்கள் புதிய ஆண்டில் இராஜதந்திரத்திற்கு எதிரான தடைகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று வாக்களித்தனர்.

குடியரசுக் கட்சியின் தலைமையிலான அரங்கில் யுத்த சக்திகளின் தீர்மானத்தை முன்னெடுப்பதற்கு தேவையான அதிகாரத்தை வழங்கும் 60 வாக்குகளை நிரப்புவதற்காக, ஜனாதிபதி ட்ரம்பின் சக குடியரசுக் கட்சியினரில் பதினொருவர் ஜனநாயகக் கட்சியினருடன் வாக்களித்தனர்.

உலகின் மிக மோசமான மனிதாபிமான பேரழிவுகளை உருவாக்கிய மோதலில் அமெரிக்க தலையீட்டின் மீதான வாக்கெடுப்பு தொடர்பான விவாதத்திற்கு இது வழிவகுத்துள்ளது.

இந்த வாக்கெடுப்பு பெரும்பான்மைக்கு அடையாளமாக இருந்தது, ஏனெனில் பிரதிநிதிகள் மன்றம் இந்த விடயத்தை 2018 ஆம்ஆண்டு இறுதி வரை கவனத்தில் எடுக்காது எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஜனாதிபதி ட்ரம்ப் வீட்டோவுக்கு ஒரு அச்சுறுத்தலையும் விடுத்திருந்தார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

# நிபந்தனையின்றியே த.தே.கூட்டமைப்பினர் ஆதரவு வழங்கினர் என்கிறார் ராஜகருணா

(கொழும்பு)

எந்தவித நிபந்தனைகளுமின்றியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐ.தே.கவுக்கு ஆதரவளித்ததாக தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா, ஒருமித்த நாடு என்ற கொள்கையின் அடிப்படையிலேயே அவர்கள் எம்முடன் ஒன்றிணைந்தனர் எனவும் தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க மீதான நம்பிக்கை பிரேரணை 117 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது. அத்தோடு மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானமும் அனைத்து முறைமைகளிலும் நிறைவேற்றப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தில் எமக்கே பெரும்பான்மை உள்ளது என்பது நிரூபிப்பதற்கு இதனைவிட வேறு வழிமுறைகள் எவையும் கிடையாது.



ஒருபுறம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனநாயகத்திற்கும் அரசியலமைப்பிற்கும் மதிப்பளித்து நம்பிக்கை பிரேரணை நிறைவேற்றப்பட்டதை ஏற்றுக்கொண்டு கூடிய விரைவில் இந்த பிரச்சினைகளுக்கான தீர்வை வழங்குவார் என எதிர்பார்க்கின்றோம்.

மறுபுறம் மகிந்த ராஜபக்ஷவும் இவற்றை ஏற்றுக் கொண்டு மரியாதையுடன் அவராக முன்வந்து பிரதமர் பதவியை துறக்க வேண்டுமெனவும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# லேக்கவுஸ் நிறுவனத்தில் முறுகலையடுத்து பதற்றம்

## பாதுகாப்பு அதிகரிப்பு





(கொழும்பு)

லேக்கவுஸ் பத்திரிகை நிறுவனத்தில் முறுகல் நிலையொன்று ஏற்பட்ட போதிலும் அது தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் குழுவொன்று லேக்கவுஸ் வாயிலில் இருந்த பதாகையை கழற்ற முற்பட்டு உள்நுழைய முற்பட்டபோது அங்கு பதற்ற நிலையேற்பட்டது.

இதையடுத்து லேக்கவுஸ் ஊழியர்கள் ஒன்றிணைந்து அவர்களை விரட்டமுற்பட்ட போது அங்கு கைகலப்பு ஏற்பட்டதையடுத்து பதற்றம் மேலும் வலுப்பெற்றது.

இந்நிலையில் கலகமடக்கும் பொலிஸார் விசேட அதிரடிப்படையினர் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டு முறுகல் நிலை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இதன்பின்னர் அங்கு கூடியிருந்தோர் சிறிது நேரத்தின் பின் அங்கிருந்து கலைந்துசென்றுவிட்டனர். அப்பகுதியில் மேலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, லேக்கவுஸ் நிறுவனத்தின் சகல தொழிற்சங்கங்களும் தமக்குள் எவ்வித முரண்பாடுகளும் இன்றி வெளியார் உள்நுழைவதை எதிர்த்துள்ளதாக அந்நிறுவன தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# மகிந்த இராஜினாமா செய்வது கௌரவமாகும்



## சம்பிக்க ரணவக்க அறிவுரை

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ இப்போதாவது கௌரவமான முறையில் தனது பிரதமர் பதவியை இராஜினாமாசெய்து கடந்த ஒக்டோபர் 25 ஆம் திகதி இருந்தவாறு நாட்டைக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்க எடுத்த தீர்மானம் சட்டத்துக்கு முரணானது என உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் மூலம் ஜனாதிபதி சட்டத்தை மீறியுள்ளார் என்பதுடன் அதிகாரத்தையும் தவறான முறையில் பயன்படுத்தியவராக மாறியுள்ளார்.

நாட்டின் அரசியலமைப்பின் காணப்படும் இறைமை, நீதிமன்ற சுயாதீனத் தன்மை, நாட்டு மக்கள் முன்னெடுத்த அகிம்சை ரீதியிலான போராட்டம் என்பனவற்றை உறுதிசெய்த நீதிமன்ற தீர்ப்புக்கு கௌரவங்கள் உரித்தாகட்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த தீர்ப்பினால் மைத்திரிபால சிறிசேனவுக்கு அரசியல் தோல்வியொன்று ஏற்பட்டுள்ளதுடன், மீண்டும்ஜனாதிபதியாக வரவேண்டும் என்ற அவரின் கனவுக்கு பாரிய சவாலாகவும் மாறியுள்ளது.

மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் முதலாவது தோல்வியையும், உயர் நீதிமன்றத்தில் இரண்டாவது தோல்வியையும் பெற்ற மகிந்த ராஜபக்ஷ தரப்பு மக்கள் நீதிமன்றத்தில் மூன்றாவது முறையாகவும் தோல்வியடையும் எனவும் பாட்டலி சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# ரணிலை நியமிக்க மாட்டேன் என ஜனாதிபதி கூற முடியாது-நளின்

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பிரதமராக நியமிக்க முடியாதென, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறமுடியாதென, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கே அதிக பெரும் பான்மை உள்ளது. எனவே அவரை பிரதமராக நியமிக்க முடியாதென ஜனாதிபதி கூறமுடியாது.

நாம் ரணில் விக்கிரமசிங்கவையே தலைவராக கருதுகிறோம். எனவே யார் என்ன கூறினாலும் சட்டபூர்வமான தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே என, நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார மேலும் தெரிவித்தார். (இ-7)

# அராஜக அரசியலுக்கு முற்றுப்புள்ளி சர்வதேசம் ஒருபோதும் மறந்து விடாது

(கொழும்பு)

நீதித்துறையினூடாக ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டு, அராஜக அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. இந்த வரலாற்று முக்கியத்துவமிக்க நாளை நாடும் முழுசர்வதேசமும்ஒரு போதும் மறந்து விடாது என ஐக்கிய தேசிய கட்சியின் பொத்துவில் தொகுதி அமைப்பாளரும், அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினருமான யூ.கே. ஆதம்லெப்பை தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பாராளுமன்ற கலைப்புக்கான வர்த்தமானி அறிவிப்பு தவறானது என நேற்று முன்தினம்மாலை உயர் நீதிமன்றத்தால் வெளியிடப்பட்ட தீர்ப்பையடுத்து அட்டாளைச்சேனை உள்ளிட்ட அம்பாறை மாவட்டத்தின் பல இடங்களிலும்நேற்று முன்தினம் ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர்களால் மகிழ்ச்சி தெரிவித்து நடத்தப்பட்ட ஊர்வலத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# "சுய இலாபத்திற்காக தமிழர்களை காட்டிக்கொடுக்கும் கூட்டமைப்பு"

(ஹற்றன்)

ரணில் விக்கிரமசிங்கவை உள்வாங்கிய நல்லாட்சி அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட்ட பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அண்மைக் காலமாக ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்திற்கும், ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக தெரிவு செய்வதற்கும் ஒத்துழைப்பு வழங்கி வருவது தமிழ் மக்கள் மத்தியில் ஒரு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளரும், மஸ்கெலியா பிரதேச சபையின் உப தவிசாளருமான பெரியசாமி பிரதீபன் தெரிவித்தார்.

ஹற்றனில் நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.



வடக்கு- கிழக்கு தமிழ் மக்களின் உரிமைகள்,கோரிக்கைகள் தொடர்பில் தொடர்ச்சியாக அழுத்தங்களை பிரயோகித்தது மட்டுமல்லாமல் தமிழ் அரசியல் கைதிகளின் விடுவிப்பு, தமிழ் மக்களது காணி விடுவிப்பு தொடர்பில் எல்லாம் அரசாங்கத்திற்கு அழுத்தத்தை பிரயோகித்து வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கை மட்டுமல்லாமல் சர்வதேச ரீதியிலும் ஒரு தனித்துவ கௌரவத்தை உள்வாங்கி செயற்பட்டது.

அண்மைக்காலமாக கட்சி கொள்கைகளிலிருந்து விடுபட்டு பணத்திற்கு விலை போகியுள்ளதோ என தமிழ் மக்கள் மத்தியில் சந்தேகம் நிலவுகிறது. சுய இலாபத்திற்காக தமிழ் மக்களை காட்டிக் கொடுக்கின்றதா தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்று கேள்வி எழுப்பியதோடு, தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குரிய சுய கௌரவத்தையும், அதற்குரிய அந்தஸ்தையும் தக்கவைத்து பாதுகாக்க வேண்டிய ஒரு பொறுப்பு தமிழ் தேசியக் கூட்டமைப்பை சார்ந்த் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒரு முக்கிய பொறுப்பாகும்.

அத்தோடு, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசிய கட்சியினூடாக ஒரு நிபந்தனையில்லாத உடன்படிக்கை செய்துள்ளதாக தகவல்கள் வெளிவருகிறது. இவ்விடயத்தை பகிரங்கப்படுத்துமாறு பெரியசாமி பிரதீபன் இவ் ஊடக சந்திப்பில் கேட்டுக் கொண்டார். (இ-7)

## ஜனாதிபதி மைத்திரி பங்கேற்பதால்

# கலாபூஷண விருது விழாவை புறக்கணித்த சிங்கள நடிகர்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கரங்களிலிருந்து விருதைப் பெற்றுக்கொள்ள முடியாது என பிரபல நடிகரான டபிள்யூ. ஜயசிறி அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரியின் கரங்களில் விருது பெற்றுக்கொள்ள விரும்பவில்லை எனவும், இதனால் விருது வழங்கும் நிகழ்வில் பங்கேற்கப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2018ஆம் ஆண்டுக் கான கலாபூஷண விருது வழங்கும் விழாவில் பங்கேற்கவில்லை என தெரிவித்துள்ளார்.

கலாசார திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த விருது வழங்கும் நிகழ்வு இன்று 15ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கொழும்பு தாமரை தாடகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி பங்கேற்பதால் இந்த நிகழ்வில் பங்கேற்கப் போவதில்லை என ஜயசிறி முகநூலில் பதிவொன்றை இட்டுள்ளார். (இ-7)

# சிறுவர் அரங்கம்

## எறும்புக்கு பயந்த அரசர்



கடியூர் நாட்டு அரசர், போர் என்று கேட்டாலே பயந்து நடுங்குபவர். இது வரை ஒரு நாள்கூட அவர் வாளெடுத்து வீசியதில்லை. ஈட்டி, கேடயம் என்றால் என்னவென்றே அவருக்குத் தெரியாது.

எறும்புக் கடிக்கே பயந்தவர் என்றால் பாருங்களேன். அரண்மனைக்குள் ஒரு எறும்பைப் பார்த்து விட்டால் போதும் காவலனைக் கூப்பிட்டுக் கேள்வி மேல் கேள்வி கேட்பார்.

"யாரங்கே? எறும்புக்குப் பதிலாக, உன்னைக் கீழே படுக்க வைத்து நசுக்கி விடுவேன்" என்று மிரட்டுவார். எறும்புகளைச் சித்திரவதை செய்து, உடனடியாகக் கொல்லச்சொல்லிக் கட்டளையிடுவார். இல்லையேல், காவலனை வேலையை விட்டு அனுப்பிவிடுவார். கடியூர் நாட்டு மன்னனின் இந்த இழிவான செயலைக் கண்டு, எறும்புகள் எதிர்த்து நிற்க விரும்பின. ஒருநாள் அவை ஒன்றுகூடித் தங்களது ராணியிடம் புகார் செய்தன.

மறுநாள், எறும்புராணி தலைமையில் இலட்சக்கணக்கான எறும்புகள் அரண்மனைக்குப் படையெடுத்து வந்தன. சாரை சாரையாக வந்த எறும்புக் கூட்டத்தைப் பார்த்து காவலர்கள் பதறினார்கள். கோட்டையின் வாயிலை மூடி வைத்தார்கள்.

கதவுக்குக் கீழிருந்த சந்து வழியாக எறும்புகள் கோட்டைக்குள் நுழைந்தன. அவை படை வீரர்களைப் போல அணிவகுத்து நின்றன. அங்கிருந்த காவலர்களைக் கடித்து வைத்தன. அரசனுக்கு அடங்காத கோபம். பாதாள அறை சிங்கத்துக்கு எறும்புகளை இரையாக்கச் சொன்னார். எறும்புகளை மண்வாரியால் அள்ளி, காவலர்கள் சிங்கத்தின் கூண்டில் வீசினர். எறும்புகள், சிங்கத்தை மொய்த்துக் கடித்தன. சிங்கத்தைச் சாகடித்தன.

அடுத்ததாகப் பட்டத்து யானைகளை அரசர் அவிழ்த்துவிடச் சொன்னார். எறும்புக்கடி தாங்காமல் பட்டத்து யானைகள் பிளிறி ஓடின. எறும்புகளைக்கொல்ல அமைச்சர்கள் ஒன்றுகூடிச் சென்றார்கள். எறும்புகள் அமைச்சர்களைக் கடித்து வைத்தன. அதைப் பார்த்து அச்சப்பட்ட அரசர், அரண்மனைக்குள் கட்டிய தெப்பத்தில் குதித்தார். இடுப்பளவு தண்ணீர் இருந்த இடம் பார்த்துப் பாதுகாப்பாக நின்று கொண்டார்.

"அரசரைக் காப்பவருக்கு ஆயிரம் பொற்காசுகள் பரிசாக வழங்கப்படும்" என்று நாட்டு மக்களுக்கு முரசறிவிக்கச் சொன்னார்.

அரசருக்கு ஆலோசனை தர வந்தவர்கள் கோட்டை வாயிலில் கூட்டமாகத் திரண்டனர். ஒருவர், ஆயிரம் கிலோ எறும்புப்பொடி வாங்கி அரண்மனை அறைகளில் தூவி விடச் சொன்னார். மற்றொருவர், தண்ணீரைப் பீச்சி அடிக்கச் சொன்னார். மூன்றாமவர், எறும்புகளின் கண்களில் மிளகாய்ப் பொடி தூவ வேண்டுமென்றார்.

கடைசியாக ஒரு முதியவர் வந்தார். நீண்ட நாட்களாக அவருக்கு, நாட்டு மன்னனைத் தைரியமுள்ள வீரனாகப் பார்க்க ஆசை. அதை, மன்னனிடம் நேரடியாகச் சொன்னால் வம்பை விலைக்கு வாங்கியது போல் ஆகிவிடும். கடுமையான தண்டனைக்கு ஆளாக வேண்டும். மன்னன் குழம்பும்படியாக முதியவர் பேசினார்.

"எதிரி நாட்டு மன்னரின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் அதிக மலைகளும் காடுகளும் உள்ளன. அந்த நாட்டின் மீது படையெடுக்க வேண்டும்" என்றார். "முதியவரே! எறும்புக் கடியிலிருந்து தப்பிக்க வழிகேட்டால், எமனிடம் அனுப்ப வழி சொல்கிறீரே" என்றார் அரசர்.

முதியவர் சற்றும் தளராமல் பேசினார்.

"எதிரி நாட்டு மலைகளிலும் காடுகளிலும் அதிகமான எறும்புத் தின்னிகள் உள்ளன. ஆகவே, எதிரி நாட்டின் மீது படையெடுத்து வென்று, எறும்புத்தின்னிகளைப் பிடித்து வர வேண்டும்" என்று திட்டவட்டமாகச் சொன்னார்.

ஒரு நாள் கழித்து, முதியவரை அரசர் அழைத்து வரச் சொன்னார். தமக்கும், படை வீரர்களுக்கும் அவரையே போர்ப் பயிற்சி தரும்படி கேட்டார். தண்ணீரில் பத்திரமாக நின்றிருந்த மன்னருக்குப் போர்ப் பயிற்சி தரப்பட்டது.

எதிரி நாட்டின் மீது படையெடுக்கப் போவதாய் ஓலை அனுப்பப்பட்டது. போரும் நடந்தது. கடியூர் அரசர் வெற்றி பெற்றார். அந்த நாட்டின் காடுகளிலிருந்து எறும்புத்தின்னிகளைப் பிடித்து வந்தனர்.

அவை ஒவ்வொன்றும் பதினாறு அங்குல நாக்கை நீட்டி, அரண்மனைக்குள் ஓடின. எறும்புகள், அவைகளின் நாக்கில் ஒட்டிக் கொண்டன. ஒரு எறும்புத்தின்னி, கால் கிலோ எறும்புகளை விழுங்கித் தீர்த்தது.


எறும்புத்தின்னிகளின் உடம்பிலிருந்த அடுக்கடுக்கான பட்டைகள், இயற்கை தந்த கேடயமாக இருந்தன. துப்பாக்கிக் குண்டுகூட துளைக்க முடியாத உடம்பை, எறும்புகளால் கடிக்க முடியவில்லை.

கொஞ்சம் கொஞ்சமாக, எறும்புகள் காலியாகின. அரசர் வெற்றியைக் கொண்டாடினார். கடியூர் நாட்டுக் கொடியில் எறும்புத்தின்னி இடம்பெற்றது.

அதன் பிறகுதான் எறும்புகள் அரண்மனைக்குள் ஏன் புகுந்தன என்ற விடயத்தையும் அரசர் தெரிந்து கொண்டார்.

அன்று முதல் எறும்புகளை மட்டுமல்ல எல்லா உயிர்களிடமும் அன்பு காட்டத் தொடங்கினார். ஒரே சமயத்தில் அரசரை நல்லவராகவும் முழு வீரராகவும் பார்த்த முதியவர் மகிழ்ச்சியடைந்தார்.

## யாருக்கு ஒழுக்கம்



அப்பாவும் மகளும் சேர்ந்து பட்டம் விட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பா கேட்டார், "மகளே!.. நூலோட வேலை என்னன்னு சொல்லு பார்க்கலாம்...?"

மகள்...கொஞ்சமும் தாமதிக்காமல் சொன்னாள்...

"நூல்தாம்ப்பா பட்டத்தின் சுதந்திரத்தை தடுத்துக் கொண்டிருக்கிறது...!"

அப்பா சொன்னார், "இல்லை மகளே, நூல்தான் அதைப் பறக்க வச்சிக்கிட்டு இருக்கு...!"மகள் சிரித்தாள்.

அப்பா ஒரு கத்தரியால் நூலை வெட்டினார்.

முதலில் பட்டம் விடுபட்டு தாறுமாறாகப் பறந்தது. கொஞ்ச நேரத்தில், சற்றுத் தூரம் தள்ளி கீழே போய் விழுந்தது.

"ஒழுக்கம் இப்படியானதுதான் மகளே...! அது உன்னை இழுத்துப் பிடித்திருப்பதாக நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய். அதிலிருந்து அறுத்துக் கொண்டால் சுதந்திரம் என்று நினைத்திருக்கிறாய். ஆனால் அந்தச் சுதந்திரம் ரொம்ப தாற்காலிகமானது. சீக்கிரமே கீழே விழுந்து விடுவாய். ஒழுக்கம்தான் உன்னைக் கொடி கட்டிப் பறக்க வைத்துக் கொண்டிருப்பது. உன்னை அதிலிருந்து அறுத்துக் கொள்ளாதே...!" என்றார்.

ஒரு பெண்ணுக்கு ஒழுக்கமான வாழ்வே அவளை உயரே பறக்க வைக்கும். அதை "சுதந்திரம்" என்ற போர்வையால் மூடி விட்டு இஷ்டப்படி வாழுகிற போது கடைசியில் நூலறுந்த பட்டமாக ஆகிவிடுவாள்.

இது ஆண்களுக்கும் சேர்த்துத்தான்...!

## செல்வா வா

மழலைச் செல்வா வாவாவா,
முத்தம் ஒன்று தாதாதா,
குழந்தைக் கண்ணே வாவாவா,
குங்குமச் சிமிழைத் தாதாதா.

செல்வம் எல்லாம் நீதானே
சேர்ந்து பாட வாவாவா,
கள்ளம் விட்டு என்னுடனே
கல்வி கற்க வாவாவா.

கன்னம் குழிய நீசிரித்தால்,
கற்கண் டெனவே இனிக்கிறதே.
விண்ணில் வந்த முழுமதியும்
வெட்கி ஓடி ஒளிகிறதே.

குழலும் யாழும் இன்பமில்லை
கூத்தும் பாட்டும் இன்பமில்லை
மழலை உன்றன் மொழிக்கிடு,
மண்ணில் ஒன்றும் இல்லையே!

நெருங்கிய நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் துரோகம் செய்யப் பலர் உளர்.
– மகாபாரதம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கூட்டமைப்பு தொடர்ந்தும் தமிழ் மக்களை ஏமாற்றக்கூடாது

பாராளுமன்றக் கலைப்பு செல்லுபடியற்றது என உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அடுத்து ஆட்சிக் குழப்பம் ஓரளவுக்கு சுமுகமாகக்கவடிய வாய்ப்புகள் உண்டு.

இவை ஒருபுறமிருக்க, பாராளுமன்றத்தைக் கலைப்புச் செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என வாதிட்டதில் தமிழ்த் தேசியக் கவட்டமைப்பின் வகிபங்கு கணிசமானது.

பாராளுமன்றத்தைக் கலைப்புச் செய்தது சட்டத்துக்குப் புறம்பானது என்ற அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாதம் செய்ததன் பின்னணியில், தமிழ் மக்களின் நலன்சார்ந்த சாதகத்தன்மை உண்டா என்றால் வெளிப்படையாக எதுவும் இல்லை என்பதே உண்மை.

அப்படியானால் பாராளுமன்றக் கலைப்புத் தொடர்பில் நீதிமன்றில் வாதிட வேண்டிய அவசியம் கூட்டமைப்புக்கு ஏற்படக் காரணம் என்னவென்று கேட்டால், ஜனநாயகத்தை நிலைநாட்டுதல் என்று பதிலளித்து அதிலிருந்து விடுபட முடியும்.

சரி, பாராளுமன்றக் கலைப்பு சட்டத்துக்கு முரணானது. சட்டத்துக்கு முரணான செயலை ஜனாதிபதி செய்தபோது அதனை எதிர்த்து நீதிமன்றம் சென்று வாதிட வேண்டாம் என்றால்,

ரணில் விக்கிரமசிங்கதான் பிரதமராக வர வேண்டும் என்ற உங்களின் விடாப்பிடியானது எதற்கானது என்ற கேள்வி கூட்டமைப்பை நோக்கி எழுந்து நிற்கும்.

இந்தக் கேள்விக்கான பதில், ரணில் விக்கிரமசிங்க பிரதமராக வந்தால், அரசியலமைப்புச் சீர்திருத்தம் பாராளுமன்றில் அரங்கேறும். அவ்வாறு அரசியலமைப்புச் சீர்திருத்தம் பாராளுமன்றில் அரங்கேறினால், அது இனப்பிரச்சினைக்கான தீர்வாகும் என்பது கூட்டமைப்பின் பதிலாக அமையலாம்.

இது அவர்களின் பதிலாக இருந்தால், ரணில் விக்கிரமசிங்கவுடன் ஏதேனும் ஒப்பந்தம் செய்தீர்களா என்ற அடுத்த கேள்வி மேலெழும்.

இங்குதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களை ஏமாற்ற முற்படுவது தெரிய வருகிறது.

அதாவது ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமராக வருவதற்கு கூட்டமைப்பு தனது ஆதரவை வழங்குவதற்காக எழுத்துமூலமான நிபந்தனைகளைக் கோரியிருந்தது எனக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கூற,

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரும் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும் அவ்வாறு எதனையும் தாம் கோரவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

இங்குதான் கூட்டமைப்புக்குள்ளேயே முன்னுக்குப் பின் முரணான தகவல்கள் வெளியாகியுள்ளன.

எது எவ்வாறாயினும் ரணில் விக்கிரமசிங்கவுக்காக தமது ஆதரவைத் தெரிவித்து கூட்டமைப்பு அந்த இடத்தில் நலனைக் கருத்தில் கொண்டு எழுத்துமூல உத்தரவாதம் எதனையும் பெறவில்லை என்றால், ரணிலுக்கான உங்கள் ஆதரவு எதற்கானது? என்ற கேள்வி எழுவதுடன் தொடர்ந்தும் தமிழ் மக்களை நீங்கள் ஏமாற்றுவதாகவே உங்கள் செயலுக்கு பொருள் கொடுக்கப்படும்.

# சபையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகள் மீதான செயற்பாடுகள் மிக மந்தகதியிலே காணப்படுகிறது

## யாழ். மாநகர சபை உறுப்பினர் இரா. செல்வவடிவேல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையில் பல பிரேரணைகள் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன. ஆனால் நிறைவேற்றப்பட்ட குறித்த பிரேரணைகள் மீதான செயற்பாடுகள் மிகவும் மந்தகதியிலே காணப்படுவதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாநகர சபை உறுப்பினர் இரா.செல்வவடிவேல் சுட்டிக் காட்டியுள்ளார்.

யாழ்.மாநகர சபையின் இவ் வருடத்திற்கான இறுதி அமர்வு முதல்வர் இ.ஆனல்ட் தலைமையில் நேற்று நடைபெற்றது. குறித்த அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்.

எமது இந்த உயரிய சபையால் நடைமுறைப்படுத்தவென தீர்மானிக்கப்பட்ட திட்டங்கள் யாவும் செயல் வடிவம் பெற நீண்டகாலம் எடுப்பது வேதனையான விடயம். குறிப்பாக யாழ்.நகரின் வீதி ஒழுங்குகள் தொடர்பில் முன்வைக்கப்பட்டவை இன்று வரை நடைமுறைக்கு வரவில்லை. அதுபோல இன்றும் பல திட்டங்களும் உள்ளன எனவும் சுட்டிக் காட்டினார்.

எதிர்வரும் காலங்களிலாவது அபிவிருத்தித் திட்டங்களுக்கு விரைவான செயல் வடிவம் கொடுக்க யாழ். மாநகர சபை முழுக்கவனத்தையும் செலுத்தி செயற்பட வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (இ-7)

## ஜனநாயகத்தைப் பாதுகாக்க ஒத்துழைத்தவர்களுக்கு நன்றி

(கொழும்பு)

நாட்டில் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக ஒத்துழைப்பு வழங்கிய சகலருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாக, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் மூலம் நாட்டில் ஜனநாயகம் நிலை நாட்டப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (இ-7)

# மீண்டும் ரத்த ஆறு பெருக்கெடுக்கும்

## டிலான் எச்சரிக்கை

(கொழும்பு)

உயர் நீதிமன்றத் தீர்ப்பானது மகிந்த ராஜபக்ஷவின் பிரதமர் பதவிக்கு எந்தவொரு ஆபத்தினையும் ஏற்படுத்தாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணில தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து வெளிநாட்டு நிகழ்ச்சி நிரல்களை நடைமுறைப்படுத்தி வருவதால், நாட்டில் மீண்டும் இரத்த ஆறு பெருக்கெடுக்கும் என்றும் டிலான் பெரேரா எச்சரித்தார். (இ-7)

## வெங்கடராமனின் ஆன்மிக உரை

(யாழ்ப்பாணம்)

சாயி சகோதரர் கிருஸ்ணமூர்த்தி வெங்கடராமனின் விசேட ஆன்மிக உரை நாளை மறுதினம் 17 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4.30 மணி முதல் இரவு 7 மணிவரை திருநெல்வேலி சேர். பொன். இராமநாதன் வீதி, சத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெறும். (இ-5)

## விபத்தில் காயம்

(வவுனியா)

வவுனியா ஏ9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் மல்லாவியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை வவுனியா, பறநாட்டாங்கல் சந்தியில் பட்டாரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மல்லாவியைச் சேர்ந்த ந.வசந்தகுமார் (42 வயது) என்பவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பட்டா வாகன சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3.250)

## வைத்தியசாலை வளாகத்திற்குள் சிரமதானப் பணி

(சாவகச்சேரி )

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வளாகத்திற்குள் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு சிரமதானப்பணி முன்னெடுக்கப்படவுள்ளது. இலங்கை - ஐக்கிய நாடுகள் நட்புறவு அமையத்தின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான சாவகச்சேரி பிரதேச இளைஞர் சபையின் ஏற்பாட்டில் இந்த சிரமதானப் பணி முன்னெடுக்கப்படவுள்ளதாக இலங்கை - ஐக்கிய நாடுகள் நட்புறவு அமைய தென்மராட்சிக் கிளையின் ஊடக ஒருங்கிணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த சிரமதானப் பணியில் ஏனையோரையும கைகோர்க்குமாறும்கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-30)

## நேரத்தைச் சேமிக்க...

- சிறிய வேலைகள் என்றாலும் முறையாக நேரத்தைக் கடைப்பிடியுங்கள்.
- அவசர அவசரமாக தவறாக செய்துவிட்டு பின்பு வருந்தாதீர்கள்.
- திட்டமிட்ட நேரத்தில் செய்து முடியுங்கள். எதையும் செய்து முடித்த பிறகு அதைப்பற்றி யோசித்தால் " நேரங்கள் திரும்புவதில்லை" என அறிந்திடுங்கள்.
- குறித்த நேரங்களில் செய்து முடிக்கும் வேலைகளினால் தான் நேரத்தைச் சேமிக்க முடியும்.
- தூக்கத்திற்கும் சோம்பேறித்தனத்திற்கும் இடமளிக்காமல் வேலைகளைச் செய்து முடித்தால் நேரத்தை மிச்சப்படுத்தலாம்.

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 5 மணி வரை யாழ். பிரதேசத்தில அல்வாய், மாலுசந்தி, வியாபாரி மூலை, இன்பருட்டி, சுப்பர்மடம், நாவலடி, லங்கா பாட சாலை, பருத்தித்துறை நகரம், சாரையடி, கிராமக்கோடு, கல்லூரி வீதி, VM வீதி, தம்பசிட்டி, சாளம்பை, புனிதநகர், மாதனை, கற்கோவளம், வெளிச்சவீடு, தும்பளை, வறாத்துப்பளை, திகிரி, கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை, மந்திகை, கே.கே.எஸ்.வீதியில் (நாச்சிமார் கோவிலிலிருந்து கொக்குவில் சந்தி வரை), கோம்பையன்மணல், சிவப்பிரகாசம் வீதி, தலையாழி, சபாபதி வீதி, பூநாரி சந்தி, நந்தாவில், கொக்குவில் சந்தி, ஞானபண்டிதா, பிரம்படி, மாவடி, மருத்துவ பீடப் பிரதேசம், செல்வமகால் திருமண மண்டபம், மின்சார நிலைய வீதி, Grand Bazzar, ஹற்றன நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம், ஞானம்ஸ் விடுதி, ரொப்பாஸ், பொம்மை வெளி, நாவாந் துறை, வில்லூனறி, யாழ.சிறைச்சாலை, பண்ணை, யாழ்.கோட்டை பிரதேசம், துரையப்பா விளையாட்டரங்கம், குருநகர், பழைய பூங்கா வீதியின் ஒரு பகுதி, பாசை யூர், கொழும்புத்துறை வீதி யின் ஒருபகுதி, இலந்தைக்கு ளம், புங்கங்குளம் வீதி, சந்தனமாதா கோவில் வீதி, வலன்புரம், துண்டி, நெடுங்குளம், மணியந்தோட்டம், கெலன்தோட்டம், பெரிய தோடடம், உதயபுரம், குருசோ வீதி, அச்சுக்கூட வீதி, பிரதான வீதியின்ஒரு பகுதி, கொடிகாமம் சந்தி, வரணிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில இரத்தினபுரம், திருவையாறு, சாந்தபுரம், இரணைமடு, SFHQ கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- கைம்மாறு கருதாமல் பிறருக்குக் கொடுத்து மகிழுங்கள். அதுவே உண்மையான இன்பம்.
- பார்க்கும் இடமெல்லாம் கடவுள் நிறைந்திருக்கிறார். எல்லாப் பொருள்களிலும் பரம்பொருளைக் காண்பதே பேரின்பம்.
- தியாகமனப்பான்மை ஒரு மனிதனை மரணமில்லாப் பேரின்ப நிலைக்கு அழைத்துச் செல்லும்.
- குறிக்கோளுக்குச் செலுத்தும் முக்கியத்துவத்தை அதை அடைய மேற்கொள்ளும் பாதைக்கும் செலுத்துவது அவசியம்.
- சிலநேரங்களில் இன்பத்தைவிடத் துன்பமே மனிதனுக்கு சிறந்த ஆசிரியராக அமைந்து விடுகிறது.
- உலகம் எவ்வளவு பெரிதோ அந்த அளவுக்கு உங்கள் மனதையும் விரிவுபடுத்துங்கள்.
- தன்னைச் சரிப்படுத்திக் கொள்பவன் உலகைச் சரிபடுத்தும் தகுதியைப் பெறுகிறான்.
- நல்ல மனிதனை உருவாக்குவதில் இன்பமும் துன்பமும் சரிசமமான இடத்தை வகிக்கின்றன.
- மனத்தூய்மை மிக்கவர்கள் இந்த பிறவியிலேயே கடவுளைக் காணும்பேறு பெறுகிறார்கள்.

















வடக்கு மாகாண விளையாட்டு திணைக்களத்தின் ஏற்பாட்டில் "வர்ண இரவு " விருது வழங்கும் நிகழ்வு கடந்த 13 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு சாவகச்சேரி நகரசபையின் பொன் விழா மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட கூரேயும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் வேதநாயகன், ஆர்.குருபரன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ். உதயசீலன், வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், தென்மராட்சி பிரதேச செயலர் தேவந்தினிபாபு, தேசிய வலைப்பந்தாட்ட அணி வீராங்கனை தர்சினி, சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கோனார ஆகியோர்கலந்து கொண்டனர். நிகழவில் வலய மட்ட, மாகாண மட்ட, தேசிய மட்ட மற்றும் ஆசிய மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிய வட மாகாணத்தைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் மற்றும் பயிற்சி ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு விளையாட்டு வீரர்கள் கௌரவிக்கப்படுவதையும் கரப்பந்தாட்ட வளர்சசிக்கு அரும்பாடுபட்ட கி.மனோ கரன கௌரவிக்கப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர் களையும் படங்களில் காணலாம். நிகழ்வில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் வீர, வீராங்கனைகள், பயிற்சி ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். (க-29-30)

## ஆப்பிழுத்த குரங்காக அவுஸ்திரேலியா மாறிவிடுமா ஆடுகளம் குறித்து இங்கிலாந்து வீரர் கருத்து

இந்திய அணியை வீழ்த்துவதற்கு இரண்டாவது டெஸ்ட் போட்டி வேகப்பந்து வீச்சா ளர்களுக்கு சாதக மாக மைதானம் அமைக்கப்படுவதால் அது அவுஸ்திரேலிய அணிக்கே ஆபத்தா கிவிடும் என்று இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் மைக்கல் வோகன் கூறியுள்ளார். இந்தியா-அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையே யான முதல் டெஸ்ட் போட்டி அடிலெய்டில் நடைபெற்றது. இதில இந்திய அணி வெற்றி பெற்று வரலாற்றுச் சாதனை படைத்த நிலையில், 2ஆவது டெஸ்ட் போட்டி பெர்த்தில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் இங்கிலாந்து அணியின் முனனாள் வீரர் வோகன, இங்கி லாந்தில் செயறபட்டதைவிட, தற்போது ஆஸி யில் பங்கேற் கும் இந்திய பந்துவீச்சா ளர்களிடம் பெரிய அளவில் மாற்றம் தெரிகிறது.

அவர்கள் அவுஸ்திரேலிய பந்து வீச்சா ளரகளை விட சிறப்பாக செயற்படுகிறார்கள். இதனால் அவுஸ் திரேலிய தனக்கு தானே ஆப்பு வைத்துக் கொள்ள வேண்டாம் என்றார்.

அகில இலங்கைக்
கம்பன் கழக
மூத்த உறுப்பினரும்,
காரைநகர் நடராஜா
முத்தமிழ்
மன்ற இயக்குநரும் சிறந்த
சமூகசேவகியுமான
திருமதி
**இராசமலர்**
**நடராஜா**
அவர்களின்
மறைவுக்கு
கம்பன் கழகம்
செலுத்தும் அஞ்சலி.



# எப்போது உனைக் காண்போம்? இதயம் வாடும்

**- கம்பவாரிதி இ.ஜெயராஜ்**

உளம் அதிர அன்னை அவள் மறைவுச் செய்தி
உள்நுழைய நெஞ்சமெலாம் உருகிற்றம்மா!
நிலீம் முழுதும் நாம் நினைந்து தேடினாலும்
நேசத்தில் அவர்க்கிணையாய் எவரே வாய்ப்பார்?
வளம் மிகுந்த தமிழ்தந்த உறவதாலே
வாஞ்சையுடன் குழந்தைகளாய் எம்மைக் காத்த
நலம் மிகுந்த ராசமலர் அன்னை போனாள்
நாமெல்லாம் துணையிழந்து வாடினோம்மே.

யாழ் மண்ணில் போரிடையே வாழ்ந்தவேளை
யந்திரமாய்ச் செயலாற்றித் தன்னை வாட்டி
நீள் அன்பில் உணவு பல செய்து எங்கள்
நிலந்தேடி வந்துண்ணச் செய்து தாயாய்
ஏழ் பிறவித் தொடர்பிதுவோ என்று எங்கள்
இதயமெலாம் நெகிழ்ந்துருகக் கருணை செய்த
ஆழ் மனத்து அன்புநிறை அன்னை இன்று
அவனிதனைக் கடந்தாளாம் அதிர்ந்து நின்றோம்.

பெண்ணாகப் பிறந்தாலும் பிறந்த மண்ணின்
பெருமைதனை நிலைநாட்ட என்று தங்கள்
விண்ணார்ந்த குலப்பெருமை சிறிதுமெண்ணா
வீதியெலாம் திரிந்து பல வீடு ஏறி
கண்ணான கலை வளர்க்கக் கைகள் நீட்டி
கடைசிவரை உழைத்த மகள் காலன் தோற்க
விண்ணாளச் சென்றாளோ விரும்பி நின்ற
வீறான மரணத்தால் புகழே கொண்டாள்.

அவ்வை இவளோ! என்று அயர்ந்து போக
அற்புதமாம் வெள்ளை உடை தரித்துக் கையில்
பவ்வியமாய் தடிபிடித்து அசைந்து வந்து
பார்த்ததுமே முகம் மலரச் சிரிக்கும் அன்னை
வெவ்விடமாய் நான் வார்த்தை வீசினாலும்
வெறுப்பின்றி அன்பதனால் அணைத்துக் கொண்டு
எவ்விடத்தும் எனை உயர்த்திப் பேசுகின்ற
ஏற்றமுடை அன்னையளை எங்கு காண்பேன்?

நெஞ்சுரத்தில் மலைக்கு நிகர் கொண்டு நின்றாள்
நினைந்தேதான் பிறர் துணைகள் தவிர்த்து நின்று
சஞ்சரித்து நினைத்ததெல்லாம் முடிக்கும் அன்னை
சலியாது தனக்கான "சைக்கிள்" செய்து
வெஞ்சமரால் வினைகள் பல விளைந்த மண்ணில்
வீறாக தனித்து உலா வந்து மற்றோர்
அஞ்சிடவே அவனியிலே நிமிர்ந்து நின்றாள்
அவட்கு நிகர் அவரின்றி யாரே உள்ளார்?

கம்பனது கழகமதைக் கண்ணாய்க் கொண்டு
காப்பதற்குப் பலகாலம் தனித்து நின்று
தெம்புடனே எம்கழகக் கோட்டம்தன்னை
தெளிவுடனே காத்தமகள் தினமும் என்னை
தம்பியென அழைக்கையிலே தயவு பொங்கும்
தானே என் தாயென்று நினைத்து நின்றாள்.
அம்புவியில் இவள் போல உறவு ஒன்று
அகப்படுமோ? ஆரிவர்க்கு நிகரேயாவார்!

உன் கடமை நான் ஏதும் செய்யவில்லை
உனக்காக எப்பொருளும் தந்ததில்லை
விண்ணளந்த உனதன்புக் கேதும் செய்யா
வினை வருத்த வாடுகிறேன்-தாயே நீ போய்
இன்னுமொரு பிறவிதன்னில் பிறந்து நிற்பாய்
ஏழை இவன் உன் மகவாய் அங்கு வந்து
தன்னிகரில் தாயே உன் தாள்கள் பற்றி
தாளாது உன் கடமை முடித்து நிற்பேன்.

உன் உறவு அனைத்தையுமே என்னதாக்கி
ஒப்பரிய பலம் செய்தாய் உறவாயன்றி
என் உயிராய் அவர்களெலாம் இணைந்து நின்று
ஏற்றியெனை வளர்த்ததனை மறக்கலாமோ!
தன் உறவால் கழகமது பலமே கொள்ள
தாயாக நின்றதனை ரசித்த அன்னாய்!
இன்று உனை அனைவருமே இழந்து நின்றோம்.
எப்போது உனைக் காண்போம்? இதயம் வாடும்.

## அமைச்சரவைக்...

தனக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் விதித்துள்ள இடைக்கால தடையை நடைமுறைப்படுத்துவதை தடுக்கும் முகமாக உத்தரவொன்றினை பிறப்பிக்குமாறு கோரி பிரதமராக நியமிக்கப்பட்ட மகிந்த ராஜபக்ஷ தாக்கல்செய்த விசேட மேன்முறையீட்டு மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது பிரதமர் பதவியிலும் அமைச்சர் பதவியிலும் கடமைகளை முன்னெடுக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் விதித்துள்ள இடைக்கால தடையுத்தரவு தொடர்ந்தும் நீடிக்கப்படுவதாகவும் அவர்கள் தமது அதிகாரங்களை செலுத்த முடியாதெனவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ தாக்கல்செய்த விசேட மேன் முறையீட்டு மனுவை பரிசீலனை செய்த உயர்நீதிமன்றம் குறித்த மனு மீதான விசாரணைகளை எதிர்வரும் 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16, 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. (ம-3)

## மகிந்த ராஜபக்...

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இராஜினாமாவை அடுத்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் பரந்த அரசியல் கூட்டணியை அமைக்க அவர் ஆதரவு வழங்குவார் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரதமர் பதவியிலிருந்து மகிந்த ராஜபக்ஷ ராஜினாமா செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனை ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷ டீ சில்வா மற்றும் ருவான் விஜயவர்தன ஆகியோர் தமது டுவிட்டரில் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இது குறித்து தகவல்களை வெளியிடாத நிலையில், மைத்திரிபால சிறிசேன அந்த கடிதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

## ஆபத்தான நிலையில் இளை...

க்கு மேல் பகுதி வழியாக வெளியே வந்துள்ளது என்று வைத்திய சாலைத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தக் கைகலப்பு நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

புத்தளத்தைச் சேர்ந்த 25 வயது இளைஞனே இவ்வாறு படுகாயமடைந்தார்.

புத்தளத்திலிருந்து பழைய இரும்புகளைக் கொள்வனவு செய்வதற்காக அவரும் அவருடைய சகாக்களும் வடி வாகனத்தில் முல்லைத்தீவுக்கு வருகை தந்துள்ளனர். முல்லைத்தீவு நகருக்கு அண்மித்த இடமொன்றில் மர நிழலில் இளைப்பாறிய போது, இளைஞருக்கும் சகாக்களுக்கும் இடையே முறுகல் ஏற்பட்டு கைகலப்பாக மாறியது.

இதன்போது இளைஞர் மீது மற்றொருவர் இரும்புக் கம்பியால் குத்தினார். அதனால் அவர் நிலை குலைந்து நிலத்தில் சரிந்தார். தலையில் காயத்துடன், முல்லைத்தீவு வைத்தியசாலையில நேற்று பிற்பகல் 1.40 மணிக்கு சேர்க்கப்பட்டார்.

அங்கிருந்து அவர் அம்புலன்ஸில் நேற்று மாலை 4.30 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இளைஞருக்கு அதிகளவு குருதிப் போக்கு ஏற்பட்டுள்ளது. அவரது தலை ஸ்கான் செய்து பார்க்கப்பட்டது. இரும்புக் கம்பி ஒரு காதுப் பக்கமாக நுழைந்து மறு காதுப் பக்கமாக வெளியில் வந்துள்ளது. (ம-3)

## எதிர்க்கட்சியில்...

மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து இராஜினாமா செய்யவார் என பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன கூறியிருந்தார்.

ஜனாதிபதியுடன் இடம்பெற்ற சந்திப்பில் பங்கேற்ற பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர், இன்றையதினம் தற்போது பிரதமராக இருக்கும் மகிந்த ராஜபக்ஷ தனது பதவியில் இருந்து இராஜினாமா செய்யாவிடின் எவரையும் பிரதமர் பதவியில் இருத்த முடியாது. நாட்டில் வரவு செலவு திட்ட்ம் ஒன்றை சமர்ப்பிக்காமல் அடுத்த வருடத்தை எதிர்கொள்வது கடினம்.

இதனை கருத்தில் கொண்டு இன்றைய தினம் விசேட அறிவிப்பு ஒன்றை விடுத்து பிரதமர் பதவியை ராஜினாமா செய்ய போவதாக மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார். அப்படி செய்தால் அமைச்சரவை கலையும். அப்படியானால் விரும்பிய அமைச்சரவையை ஜனாதிபதி நியமிக்கலாம். நீதிமன்றம் வழக்கை ஒத்திவைத்துள்ளதால் எமக்கு எதனையும் செய்ய முடியவில்லை.

ஆகவே நாட்டின் ஸ்திரத்தன்மையை பேணுவதற்காக மகிந்த ராஜபக்ஷ பதவியை ராஜினாமா செய்யவுள்ளதாக தீர்மானித்துள்ளார். எனவே நாம் எதிர்க்கட்சியில் அமர்ந்துக்கொண்டு போராட எதிர்பார்கின்றோம். எனவே ஜனாதிபதிக்கு விரும்பியவரை பிரதமராக நியமிக்கலாம் என கூறினார். (ம)

# ரணிலை சந்தித்த பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

பொலிஸ் மா அதிபர் உட்பட பொலிஸ் உயர் அதிகாரிகள் நேற்று அலரி மாளிகைக்கு சென்று முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை சந்தித்துள்ளனர்.

பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர, பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி வித்தியாலங்கார மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் உட்பட சில அதிகாரிகள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

கடந்த ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷ பிரதமராக பதவிப் பிரமாணம் செய்து கொண்ட பின்னர், இரவு இந்த பொலிஸ் அதிகாரிகள் குழு மகிந்த ராஜபக்ஷவை சந்தித்திருந்தது.

சட்டம், ஒழுங்கை பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதாக இந்த அதிகாரிகள், மகிந்த ராஜபக்ஷவிடம் கூறியிருந்தனர்.

உயர்நீதிமன்றம் நேற்று மாலை தீர்ப்பை அறிவித்த பின்னர், காணப்பட்ட அரசியல் சூழ் நிலையில், ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமராக பதவியேற்க தயாராக வருவதாக செய்திகள் வெளியாகின.

நேற்று அதிகாலை இந்த செய்தி சற்று உறுதியானதை அடுத்து பொலிஸ் அதிகாரிகள் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துள்ளதாக பொலிஸ் திணைக்களத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த பொலிஸ் அதிகாரிகளின் உடை மீண்டும் மாறியுள்ளதாக பொலிஸ் திணைக்களத்தில் கேலியாக பேசப்படுவதாக கூறப்படுகிறது.

அத்துடன் இப்படியான அதிகாரிகள் சுயாதீன பொலிஸ் சேவைக்கும் பெரும் தடையாக இருப்பதாகவும் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன இந்த அதிகாரிகளை தனிப்பட்ட ரீதியில் சந்திக்க எதிர்பார்த்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம-3)

## த.தே.கூட்டமை...

உறுப்பினரான சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், சிங்கள குடியேற்றம் தொடர்பில் அந்தந்த காலங்களில் இருந்த ஆட்சியாளர்களிடம் தொடர்ந்தும் வினவப்பட்டது. இன்று அவருக்கு வழங்கப்பட்ட ஆதரவின் ஊடாக சிங்கள குடியேற்றத்தை நிறுத்தியுள்ளோம்.

அரசியல் ரீதியில் இராஜதந்திர அரசியலை நாம் பின்பற்றுகின்றோமேயன்றி இப்போதும் அரசின் செயற்பாடுகளை விமர்சித்துக் கொண்டுதான் உள்ளோம். அரசினால் பல விடயங்கள் நிறைவேற்றப்பட வேண்டி உள்ளது. அரசு அதை செய்ய தவறினால் அதற்கு மாற்று விடயங்களை கையாளக் கூடிய விடயங்கள் எம்மிடம் உள்ளது.

நாம் மக்கள் நலன் சார்ந்தே இவ்வாறு செயற்பட்டோம். இதன் மூலம் பல விடயங்களை சாதிக்கலாம் என எண்ணியே நாம் ஆதரவளித்துள்ளோம். கடந்த காலங்களில் நாம் தனியே ரணில் விக்கிரமசிங்க அவர்களை மாத்திரம் ஆதரித்திருக்கவில்லை. மைத்திரிபால சிறிசேனவையும் நாம் ஆதரித்திருந்தோம்.

அவருக்கான ஒத்தாசை பலவற்றையும் வழங்கியிருந்தோம். மக்களின் அபிலாசைகளிற்கான தீர்வு, காணாமல் ஆக்கப்பட்டவர்களிற்கான தீர்வு, அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், இராணுவத்திடம் உள்ள காணிகளை உடன் விடுவித்தல் உள்ளிட்ட விடயங்களில் நாம் தெளிவாக உள்ளோம். அதை அடைவூதற்கு நாம் முழுமையாக செயற்படுவோம்.

வடக்கிற்கு அபிவிருத்தி அமைச்சராக எவரும் நியமிக்கப்பட்டதாக எதுவும் இல்லை. அவரது காலத்தில் வடக்கில் எதுவும் நடக்கவில்லை. அவர்களால் மக்களிற்காக எதுவும் செய்யப்படவில்லை என்பதை இன்றும் சுட்டிக்காட்டுகின்றோம்.

தமது கட்சியை வளர்த்தார்களே அல்லாமல் தமிழ் மக்களின் தேவைகள், அவர்களின் அபிலாசைகளை நிவர்த்தி செய்வதில் அவர்கள் செயற்படவில்லை என தெரிவித்துள்ளார். (ம-3)

## ஒழுக்கச் சீர்கேடு...

சமய நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஒழுக்கம் சீர்கெட்டுள்ளமையினால், சமூகத்தில் பாரியபாதிப்பு ஏற்பட்டுள்ளது.

ஒழுக்கம் சீர்கெட்டுப்போனால், எதிர்காலத்தில் அது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். (ம)

## சபாநாயகர் கரு...

நாங்கள் எப்படி நடந்துகொள்வது என்று கட்சியுடன் பேசித் தீர்மானிக்க வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷ நேற்றுக் காலை என்னை சந்தித்து இந்த நெருக்கடி நிலைமை தொடரவிட்டு என்னை மேலும் சிக்கலுக்குள்ளாக்க விரும்பவில்லையென தெரிவித்து பதவி விலகுவதாக சொன்னார்.

நாங்கள் வேறல்ல. எதிர்க்கட்சியில் எங்களது கட்சி உட்காரும் என தெரிவித்துள்ளார். (ம-3)

## பிரதமராக...

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாளை ஞாயிற்றுக்கிழமை புதிய பிரதமராக பதவிப்பிரமாணம் செய்து கொள்ளவுள்ளார் என பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் நேற்று இரவு தொலைபேசியில் இடம்பெற்ற உரையாடலின் போது இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்

ஜனாதிபதி செயலகத்தில் நாளை காலை 10 மணிக்கு புதியபிரதமர் பதவிப்பிரமாணம் இடம்பெறும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அமைச்சரவை நியமனம் தொடர்பில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார். (ம)

## அடுத்த பாராளுமன்ற அமர்...

வுள்ளனர்.

பாராளுமன்றத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலைத்தமை அரசியலமைப்புக்கு முரணானது மற்றும் சட்டவிரோதமானது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பின் முடிவை எடுத்தது.

இந்நிலையில் குறித்த முடிவை தாங்கள் எடுத்துள்ளதாக பத்தர முல்ல, நெலும்மாவத்தையில் உள்ள கட்சியின் தலைமையலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அந்தவகையில் பாராளுமன்ற அமர்வில், அரசியலமைப்பு மற்றும் நிலையியற் கட்டளையின் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினர்களாக தொடர்ந்தும் செயற்பட முடியும் என அவர் கூறினார்.

குறிப்பாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் புதிதாக அங்கத்துவத்தை பெற்றவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவியை இழக்க நேரிடும் என தெரிவிக்கப்பட்ட நிலையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். (ம-3)


## கிழவன்காடு கலாமன்றத்தின் கண்ணீர் பூக்கள்

அமரர் நடராசா இராசமலர்



காரைநகர்க்களபூமியில் முத்தமிழ்பேரவையின் இயக்குநராக இருந்து கலைப் பணிக்கே தன்னை அர்ப்பணித்த **நடராசா இராசமலர்** அவர்களின் திடீர் மறைவுத் துயர் அறிந்து அதிர்ச்சி அடைவதோடு அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர தில்லைக்கூத்தனின் திருவடிகள் சேர பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினருக்குஎமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிர்வாக சபையினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்

கிழவன்காடு கலாமன்றம் காரைநகர் கிளை, யாழ் கிளை.

(C-4719)


**மெகா பவர்**
திகதி 14/12/2018
சீட்டிழுப்பு இலக்கம் 318
F 23 06 09 20 59

**மஹஜன சம்பத**
திகதி 2018/12/14
சீட்டிழுப்பு இலக்கம் 3811
L 1 9 5 3 7 2

**கொவிசெத**
திகதி 2018.12.14
சீட்டிழுப்பு இலக்கம் 1973
U 02 21 70 74

**தன நிதானய**
திகதி 2018-12-14
சீட்டிழுப்பு இலக்கம் 88
Z 14 23 24 63

தேசிய லொத்தர் சபை

அநேக பெற்றோர்களின் வேண்டுகோளிற்கிணங்க
யாழ். கோயில் வீதியில்...
**GROUP CLASSES**
யாழ். பிரபல ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை
**Tamil & English Medium Gr.6 - O/L வரை**
ஆரம்பம்: 16.12.2018
ஞாயிறு பிற்பகல் 4 மணி
பொஸ்கோ பாடசாலையில் இருந்து 100m
இராசம்மா (திருமண மண்டபத்துக்கு அருகில்)
தொடர்புகளுக்கு:
♦தனிப்பாட அனுமதிகள் உண்டு 0776679544, 0763432521

## உயர்...

கட்சியின் வெற்றியாகவோ அல்லது ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியாகவோ குறிப்பிட முடியாது.

ஏனெனில், ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் அமைச்சர்கள் ஆறு பேர் இந்த சூழ்ச்சிக்கு பங்களிப்பு செய்துள்ளனர்.

எனவே, இதனை எவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றி எனக் கூறுவது என விஜித்த ஹேரத் கேள்வி எழுப்பியுள்ளார்.

உயர்நீதிமன்ற தீர்ப்பு ஜனநாயகத்துக்கு கிடைத்த வெற்றி என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

**31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**

கடந்த 15.11.2018 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

உதிப்பு 24 . 02 . 1941



உதிர்வு 15 . 11 . 2018

**அமரர் நவரத்தினம் புண்ணியமூர்த்தி**

அவர்களின் மரணச் செய்தி கேட்டு நேரில் வருகைதந்து ஆறுதல் தெரிவித்தோருக்கும், உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து கடிதம், தொலைபேசி மூலமாக அனுதாபம் தெரிவித்தோருக்கும், மலர் வளையங்கள் சாத்தியும், கண்ணீர் அஞ்சலி துண்டுப்பிரசுரங்கள், அஞ்சலி பதாகைகள் காட்சிப்படுத்தியும் தமது அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் இன்று (15.12.2018) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வைரவர் கோவில் வீதி,
நெல்லியடி கிழக்கு, வதிரி, கரவெட்டி.
(6703)
தகவல் :
குடும்பத்தினர்.

FLC FRENCH LANGUAGE CENTRE
**பிரெஞ்சு**
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
(C-4586)
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781
181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS, SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

**விற்பனைக்கு**
மானிப்பாய் தெற்கு ஜே/139 கிராம உத்தியோகத்தர் பிரிவில் பிரதான வீதிக்கு அருகாமையில் வீடு, பயிர் வகைகளுடன் கூடிய 6 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0755047229, 0212228025

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af **பிரெஞ்சு மொழி**
➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY**யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANÇAISE** மட்டுமே
➢ அங்கிகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
➢ யாரும் படிக்கலாம். **www.ambafrance-lk.org**
(C-4706)
**021 222 8093** 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
WESTERN UNION **070 330 5500** WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் – மீசாலை – கிளிநொச்சி – கனகராயன்குளம்
முல்லைத்தீவு – மன்னார் – வவுனியா – திருகோணமலை
(C-4660)

**விரைவு பொதிகள் சேவை**
**விசேட விலை குறைப்பு**
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
(C-4653)
● மானிப்பாய் ✆ 0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS

# NEW SCIENCE HALL

KANNATHIDDY **2021 A/L** JAFFNA

**கணித உயிரியல் பிரிவு**

| தமிழ் மொழி மூலம் | ENGLISH MEDIUM |
|---|---|
| **PHYSICS** | **PHYSICS** |
| திரு.S. சோதிலிங்கம்- திரு. N. கபிலன் | MR.S.SOTHILINGAM |
| திரு.G. பிரபா- திரு.K. செல்வன் | MR.M.KUGANESWARAN |
| **CHEMISTRY** | **CHEMISTRY** |
| திரு.K. சிவத்திரன் திரு.N. மகேஸ்வரன் | MR.G.BENO |
| திரு.G.BENO திரு. T. சுசாந்தன் | MR.N.MAHESWARAN |
| **BIOLOGY** | **BIOLOGY** |
| எமது வழமையான ஆசிரியருடன் | OUR USUAL TEACHER |
| திரு.T. கெங்காதரன் திரு. K. இராகவன் | MR.S.P.NAGANATHAN |
| **COM. MATHS** | **COM. MATHS** |
| திரு.P. செந்தில்நாதன் - திரு. S. சிவகரன் | MR.P.SENTHILNATHAN MR.S.SIVAKARAN |

(C-4712)

**14.12.2018 அன்று ஆரம்பமாகி விட்டன. FRIDAY-7.00 AM**

https://facebook.com/ new science hall jaffna 077 791 7611

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.